விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 06 வெள்ளிக்கிழமை (19.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 031



கம்பவாரிதி
இ.ஜெயராஜ்
எழுதிய
"நடக்காது என்பார் நடந்துவிடும்"
சிறப்புக் கட்டுரைத் தொடர் உள்ளே...

பிணை முறி மோசடி தொடர்பில்

## கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை

ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு முழுமையாக நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். 23

## பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசு உடனடியாக நீக்க வேண்டும்

ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்து



23

## யாழ்.பரமேஸ்வரா சந்தியில் பல்கலை மாணவர்கள் மோதல்

### விசேட அதிரடிப்படை குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பரமேஸ்வரா சந்தி மற்றும் யாழ்.பல்கலை விடுதியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களது மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று இரவு 9.30 மணியளவில் கலைப்பீட மாணவர்களுக்கிடையே இம் மோதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அங்கு விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வந்ததாக கூறப்பட்டுள்ளது.

கலைப்பீடமாணவர்களுடையே கடந்தவாரம் மோதல் ஏற்பட்டு 3.4 ஆம் வருட மாணவர்களுக்கான கலைப்பீடம் மறு அறிவித் 23

## ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக

# நடவடிக்கை எடுத்த பின்னரே

# பதவியிலிருந்து விலகுவேன்

## மக்கள் சந்திப்பில் மைத்திரி அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த பின்னரே தான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியாக அறிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



ஏழாலை பகுதியில்

## இரு ஆலயங்களில் நேற்று இரவு கொள்ளை

(ஏழாலை)

ஏழாலைப்பகுதியில் இரு ஆலயங்களில் நேற்று இரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

ஏழாலை முடி மன்னர் ஆலயம் மற்றும் கந்தியடி ஞானவைரவர் ஆலயம் ஆகிய இரு ஆலயங்களில் கதவுகள் உடைக்கப்பட்டு திருட்டு இடம்பெற்றுள்ளது. 23

முல்லைத்தீவு பகுதியில்

## ஜனாதிபதியின் பதாகை தீயிட்டு எரிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அலுவலகம் ஒன்றில் கட்டப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உருவப்படம் தாங்கிய விளம்பர பதாகை ஒன்று இனம் தெரியாத நபர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு 9 ஆம் வட் 23

சாவகச்சேரி பஸ் நிலையத்தில்

## தனியார் – இ.போ.ச நடத்துநர்கள் மோதல்

(சாவகச்சேரி)

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து சாரதிகளுக்கும், கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற பேருந்து சாரதிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம்நேற்று மதியம் இடம்பெற்றதாக தெரிவிக் 23

## பிணை முறி தொடர்பான விசாரணை அறிக்கையின் 103 பக்கங்கள் மாயம்

(கொழும்பு)

மத்திய வங்கி ஊழல் மோசடி தொடர்பில் வெளிவந்திருக்கும் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் சில பக்கங்கள் மாயமாகியிருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றி 23

1996ஆம் ஆண்டு நாவற்குழியில் காணாமல் போனோர் தொடர்பில்

## சட்டமா அதிபர் திணைக்களம் முன்னிலையாவதன் மூலம் இலங்கை அரசு பொறுப்பாளிகள் ஆகின்றனரா?

### யாழ் மேல் நீதிமன்றில் சட்டத்தரணி குமாரவடிவேல் கேள்வி

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ மேஜர் ஜெனரல் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களம் முன்னிலையாவதன் மூலம், இந்த காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்திற்கு இலங்கை அரசும் பொறுப்பாளிகள் ஆகின்றனரா? என சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனால் யாழ். மேல் நீதிமன்றில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. சித்திரவதைக்குட்பட்ட நபர்கள் அடிப்படை மனித வுரிமை மீறல் வழக்குகள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படுகின்ற போது சட்டமா அதிபர் திணைக்களம் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்காக ஆஜராவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் சட்டமா 24

## நேபாள இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம்!

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பையேற்று நேபாள இராணுவ தளபதியான ஜெனரல் ராஜேந்திரசேத்ரி அவரது பாரியார் மற்றும் இராணுவப் பிரதிநிதிகள் உள்ளடக்கிய குழுவினர் இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத் 23

தமிழர் காணாமல் போகச் செய்யப்பட்டதாக

## குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிக்கு உயர்பதவி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பகுதியில் கடந்த 1996 ஆம் ஆண்டு அதிகளவான தமிழர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டதற்கு காரணமாக இருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள இராணுவ அதிகாரி துமிந்த கெப்பற்றி பொலாவக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அவருக்கு மேஜர் ஜெனரல் பதவி வழங்கப்பட்டு மன்னாரில் உள்ள 66 ஆவது படைப்பிரிவின் பொறுப்பதிகாரியாக தற்போது கடமையாற்றுவதாகவும்,

அவருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றில் [illegible]

## கொடிகாமம் புத்தூர் பகுதியில் துப்பாக்கி முனையில் கொள்ளை

### பொலிஸாரின் உடனடி நடவடிக்கையால் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பகுதியில் துப்பாக்கி முனையில் பணக் கொள்ளையில் ஈடுபட்ட இருவரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் இவர்கள் மறைந்திருந்தமை தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் புலனாய்வு அதிகாரி கே.தினேசுக்கு கிடைக்கப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே மேற்படி கைது நடவடிக்கையானது இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு ஏழாலையூரில் இருந்து தம்பதிகள் காரில் யாழ்.நோக்கி சென்ற போது 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வைரஸினால் பாதிக்கப்பட்ட பாலகன் உயிரிழப்பு

(கரணவாய்)

வைரஸ் தாக்கத்திற்கு உள்ளான 2 1/2 மாத பாலகன் ஒருவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கரவெட்டி வடக்கு ஆண்டார் வளவைச் சேர்ந்த நிரோஜன் அஸ்மிலன் என்ற பாலகனே உயிரிழந்துள்ளான்.

நோய்த்தாக்கத்திற்கு உள்ளான பாலகன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையில் புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பான மரண விசாரணையினை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரண அதிகாரி பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-60)


காரைநகர்

கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்

171வது இசை ஆராதனை விழா

அழைப்பு



இடம் :கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்

காலம்:21.01.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு

நிகழ்ச்சி நிரல்

01.ஈழத்துப் பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கும் "மங்கள இசை"

02.ஈழத்துப் பிரபல கர்நாடக இசைக்கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள் வழங்கும் "இசை ஆராதனை"

குறிப்பு

★ நிகழ்வுக்கான இலவச போக்குவரத்துச் சேவை கலாமன்ற யாழ். கிளையில் இருந்து பி.ப 2.15 மணிக்கு ஆரம்பமாகும். (இல 11, 1வது கஸ்தூரியார் ஒழுங்கை, உதயன் பணிமனை அருகாமை ஒழுங்கை, யாழ்ப்பாணம்).

★ மங்கள இசை, இசை ஆராதனையில் பங்குகொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்து கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்

(C-1266)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532



WESTERN UNION WU

moving money for better

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

(C-1250)



## கார், வான் வாடகைக்கு தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.

0710404978

(2450)


# விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டும் மாணவர்கள் வருகை தரவில்லை

## துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களுக்கான வகுப்புத்தடை நீக்கப்பட்டு, விரிவுரைகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மாணவர்கள் சமுகமளிக்கவில்லை என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் நான்காம் வருட மாணவர் குழுக்களுக்கிடையே அண்மையில் இடம்பெற்ற மோதலை அடுத்து கலைப்பீட மூன்றாம் நான்காம் வருட மாணவர்களுக்கு பல்கலைகழக வளாகத்துக்குள் நுழைவதற்கு பொதுத் தடை விதிக்கப்பட்டது. 3ஆம் 4ஆம் வருட மாணவர்களுக் கான பொது தடை விலக்கப்பட்டு இன்று (நேற்று) விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் மாணவர்கள் வருகைதரவில்லை.

மேலும் முதலாம் இரண்டாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் வழமை போன்று நடைபெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-09)

# பலமான தேசத்தை கட்டியெழுப்ப பெண்களை தேர்வு செய்யுங்கள்

## மாநகரசபை வேட்பாளர் கோடீஸ்வரன் லதா

பலமான தமிழர் தேசத்தை கட்டியெழுப்ப உள்ளூராட்சி சபை தேர்தலில் பெண்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என யாழ். மாநகர சபை வேட்பாளர் திருமதி கோடீஸ்வரன் லதா கூறியிருக்கின்றார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின போதே அவர் மேற்கண்டாவறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் அவர் கூறுகையில்,

நான் இந்த தேர்தலில் வெற்றியடைவதன் ஊடாக நான் வாழும் கிராமத்தின் அல்லது யாழ்.மாநகரசபை க்குள் உள்ள கிராமங்களின் அபிவிருத்திக்காக நாங்கள் உழைப்போம். மேலும் கடந்தகாலத்தில் நாங்கள் தேர்வு செய்தவர்கள் ஒன்றுமே செய்யாத நிலையில் நான் மாற்றுக் கட்சியான தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஊடாக களமிறங்கியிருக்கின்றேன் என்றார். (ம-4)


கிழவன்காடு கலாமன்றத்தின்

## கண்ணீர்ப் பூக்கள்



மண்ணில் 16.12.1967 விண்ணில் 10.01.2018

கலாநிதி விஜயரட்ணம் ஜோன்மனோகரன் கெனடி

(எதியோப்பியா பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர்)

எமது கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர் திருமதி வீரமங்கை யோகரத்தினம் அவர்களது பாசமிகு சகோதரர் அமரர் விஜயரட்ணம் ஜோன் மனோகரன் கெனடி அவர்களது திடீர் மறைவு அறிந்து பேரதிர்ச்சி அடைவதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக் கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர், யாழ்கிளை

(A-1265)



## தேவை

சட்டறிங் வேலைக்கு பாவிக்கும் முட்டுத்தடிகள், பலகைகள் விற்க இருப்பின் உடன் தொடர்பு கொள்ளவும்.

0764280010

(சி-1268)



## விற்பனையாளர் தேவை

எமது புடைவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் விற்பனையாளர் தேவை. நேரில் வரவும்.

சென்னை பெஷன்

63, பெரிய கடை யாழ்ப்பாணம்

(246)


## மரண அறிவித்தல்

### திருமதி வீரசிங்கம் தவமணி



யாழ்.அரியாலை கனகரத்தினம் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் தவமணி அவர்கள் 17.01.2018 புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம்-யோகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான "வண்டர்" என்று அன்பாக அழைக்கப்படும் வீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தவலிங்கம், தவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், கந்தையா மற்றும் செல்லம்மா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மாலினி, கௌரிதாஸ், விமலாவதி, ஜெயசிங்கம், கிரிசா, பிரதீபா (ஆஷா), மைதிலி, சோபிகா, சிந்துஜா மற்றும் காலஞ்சென்றவர்களான மல்லிகா, கௌசல்யா (லலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கேமதாஸ், மேதினி, வைமா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும், சசிரேகா, மஞ்சுளா, சசிகரன், சுரேஸ்ராஜ் மற்றும் காலஞ்சென்றவரான பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வினோஜா, நிரோஜா, செந்தூரன், அஸ்வினி, சங்கீதப் பிரியன், சங்கீதப் பிரியா, சஜீவன், சானுஜா, பிருந்திகா, அபிசேக், லக்சனியா, சுமன்ராஜ், மயூரி, சந்தோஸ், சஜிமிகன், நிஜய், சஸ்மிகா மற்றும் காலஞ்சென்ற விதுசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இல.31/1 கனகரத்தினம் வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்

31/1 கனகரத்தினம் வீதி, அரியாலை (2460)


## சேவை நலன் பாராட்டு



திருமதி சிவஞானம் ஸ்ரீகாந்தன்

யா/கலட்டி மெதடிஸ் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியராக இருந்து சிறப்பாகக் கடமையாற்றி இன்று ஓய்வுபெறும் திருமதி சிவஞானம் ஸ்ரீகாந்தன் அவர்களை அகமகிழ்ந்து ப்ர்ராட்டுவதுடன் அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

(இ)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படாது அரசியலமைப்பு மாற்றம் நடைபெறாது

# மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு மைத்திரி போட்டியிடுவார்!



## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திட்டவட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாகப் போட்டியிடுவார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் களைச் சந்தித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படாது. அரசியலமைப்பு மாற்றம் நடைபெறாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக போட்டியிடுவார்.

இரண்டாவது பதவிக் காலத்துக்காகப் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேனதான் பொருத்தமான வேட்பாளர்.

அடுத்த ஜனாதியாக மைத்திரியேதெரிவுசெய்யப்பட வேண்டும் என பெரும்பான்மையான மக்கள் விரும்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

### அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து

# தேநீர் குடிக்கவே வெளியே சென்றேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவைக் கூட்டத் தில் அமைச்சர்களுக்கு முக்கி யமான ஒரு உபதேசத்தை வழங்கினேன். அவ்வாறு உபதேசத்தை வழங்கி விட்டு நான் தேநீர் அருந்துவதற்காக சற்று வெளியே சென்றேன். தேநீர் அருந்திவிட்டு மீண்டும் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண் டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எல்பிட்டியவில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நான் அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்களுக்கு ஒரு உபதேசத்தை வழங்கினேன். அதனை ஊடக ங்கள் பல்வேறு விதமாக அறிக்கையிட்டுருந்தன. அங்கு இருந்த அமைச்சர்கள் இப்போது இங் கும் இருக்கின்றனர்.

பௌத்த கோட்பாட்டை கூறியே நான் அமைச்சர்க ளுக்கு உபதேசம் வழங்கினேன். தவறு செய்த எவ ரும் எங்கும் ஒழிந்துவிட முடி யாது. அது தொடர்பாகவே நான் 35 நிமிட ங்கள் உப தேசம் வழங்கினேன். இவ் வாறு அரசாங்கத்தை நடத்த முடியுமா? என்பது குறித்து தீர்மானம் ஒன்றை எடுக்கு மாறு கூறிவிட்டு நான் தேநீர் குடிக்கச் சென்று விட்டேன்.

மீண்டும்வருவதாக கூறியே தேநீர் குடிக்கச் சென்றேன். அதன் பின்னர் நான் வந்து அமைச்சரவைப் பணிகளை முன்னெடுத்தேன். கடந்த காலத்தில் இந்த நாட்டில் இடம்பெற்ற மிகப் பெரிய கொள் ளையாக மத்திய வங்கி கொள்ளை காணப்படுகின்றது. நான் அது தொடர்பாக ஆணைக்குழு அமைத்து விசாரித்தேன்.

மத்திய வங்கியின் ஆளுநர், ஊழல் விசாரணை ஆணைக்குழு உறுபினர்கள், சட்டமா அதிபர், அரசதுறைகளின் சட்ட நிபுணர்கள் என அனைவரையும் அழைத்து பேச்சு நடத்தி விட்டே இங்கு வந்தேன். அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு எடுக்க முடியும் என கேட்டு விட்டுத்தான் வந்தேன். இத ற்கு எவ் வள்வு காலம் எடுக்கும் என்றும் ஆலோசித்தேன்.

திருடர்களைத் தண் டிக்கவும் அவர்களை சிறைக்கு அனுப்பவும் தேவையான ஏற்பாடுகளை செய்துவிட்டே இந்தக் கூடத்திற்கு வந்துள் ளேன். தேவையான தீர்மா னங்களை எடுத்துவிட்டேன். புதிதாக மூன்று சட்டமூலங்கள் கொண்டு வரப் படவுள்ளன. இதன்மூலம் மீண்டும் இந்த நாட்டில் மத்திய வங்கி கொள்ளை இடம்பெறாது பார்த்துக்கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## அன்புடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு...

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், உங்களின் நியாயமான தீர்ப்புக்காக உங்களுடன் மனந்திறந்து சில கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள முற்படுகின்றேன்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகப் பிரதேசத்தில் இயல்புச் சூழல் முடக்கப்பட்டுக் கிடந்ததையும், அரசியல் தலைமைகள் செயற்பட முடியாமல் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கும், தென் இலங்கைக்கும் ஓடியதையும், அரச இயந்திரம் இயங்க முடியாமல் போனதையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான ஓர் இருண்ட சூழலிலேயே துணிச்சலோடு தேசிய நீரோட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.
அந்தச் சூனியச் சூழலையும், தடைகளையும் எதிர்கொண்டு, எமது தாயகத்தில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கும், எமது மக்கள் இயல்புச் சூழலை அனுபவிப்பதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தபடி நானே முன்னின்று உழைத்திருந்தேன்.

மக்கள் சேவையை திறம்படச் செய்து முடிப்பதற்காக இரவு பகல் பாராமலும், நேர, காலம் பாராமலும், மழை, வெய்யில் பாராமலும் நான் செயல்பட்டபோது, எனக்கு உங்களின் ஆலோசனைகள் தேவையாக இருந்தன. உங்களின் பங்களிப்பும் தேவையாக இருந்தது. அதற்காக, எந்தவேளையில் நான் உங்களை அழைத்தாலும் நீங்கள் வருகை தந்து மனம் சோராமல் உதவி செய்தீர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியைச் செய்தாலும், அதை ஒரு சமூக சேவையாகவும், மனிதாபிமானப் பணியாகவும் நினைத்து மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுத்ததையும், நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அத்துடன் நீங்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட உங்களுக்கு நான் பக்கபலமாக இருந்ததையும் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.
உங்கள் பங்களிப்பும், உதவியும் கிடைக்கப்பெற்றதால்தான், யுத்த இடிபாடுகளாகக் கிடந்த யாழ். குடா நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்தது.

எனது அயராத முயற்சியினால்தான் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது. அந்த நன்றி உணர்வோடு இன்னும் பலர் இருப்பதையும் அன்போடு ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்.எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேரகாலம் பாராமல் நான் அரச அதிகாரிகளை அழைத்திருந்தேன் என்பதற்காகவும், மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நியாயமான உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டுக்கொண்டதற்காகவும் உங்களில் சிலர் அதிருப்தியடைந்திருப்பதாலேயே தபால் மூல வாக்குகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு கணிசமான வாக்குகள் கிடைப்பதில்லை என்று கூறப்படுவதை நான் உண்மையென்று நம்பவில்லை.

எமது மக்களுக்காகவே நான் பாடுபட்டேன். எமது மண்ணுக்காகவே உழைத்தேன். கடந்த மூன்று வருடங்களாக எனக்கு எதிரான சக தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சதி காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்களும், அபிவிருத்தியற்று முடங்கிப்போனது எமது தாயகப் பிரதேசமும்தான். இப்பாதிப்பையும், பின்னடைவையும் எமது மக்கள் உணர்ந்து வருவதையும், அதை வெளிப்படுத்தி வருவதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.
இந்த முடக்கத்திலிருந்து அபிவிருத்தியும், மீள் எழுச்சியும் முழு வீச்சில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலம் மீதான நம்பிக்கையை எமது மக்களிடையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். சமூகச் சீர்கேடுகளை நிறுத்தி, அதனால் பாதிப்புக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதற்காக நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறான தீர்மானம் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. இம்முறை நியாயத்திற்காக எனது கோரிக்கையை ஏற்று நியாயத் தீர்ப்பை எழுதுவீர்கள் என்று நம்புகின்றேன்.

**முயல்வோம்! வெல்வோம்! உளம்சோரோம்!!**






என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.சி.சி விருதுக்காக பாகிஸ்தான் பந்து வீச்சாளர் ஹசன் அலி தேர்வு



2017-ம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர்கள் பட்டியலை ஐ.சி.சி நேற்று அறிவித்தது. வளர்ந்து வரும் வீரருக்கான விருதிற்கு பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஹசன் அலி, ஷதாப் கான், குல்தீப் யாதவ், அல்சாரி ஜோசன், பீட்டர் ஹேண்ட்ஸ்காம்ப், மேத் ரென்ஷா ஆகியோர் பெயர் பரிந்துரை செய்யப்பட்டது.


இதில் ஹசன் அலி வளர்ந்து வரும் வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்த விருதை பெறும் முதல் பாகிஸ்தான் வீரர் இவராவார்.

2016-ம் ஆண்டு பாகிஸ்தானின் ஒருநாள் மற்றும் ரி20 கிரிக்கெட் அணியில் அறிமுகமானார். இங்கிலாந்தில் நடைபெற்ற ஐ.சி.சி சம்பியன் டிராபி தொடரில் பாகிஸ்தான் கோப்பையை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார். அந்த தொடரில் 13 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பாகிஸ்தான் அணிக்காக 18 போட்டிகளில் விளையாடியுள்ள ஹசன் அலி 45 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். இதில் மூன்று முறை ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தினார். விரைவாக (24 ஒருநாள்) 50 விக்கெட்டுக்கள் கைப்பற்றிய பாகிஸ்தான் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இதற்கு முன் ஜோஷ் ஹசில்வுட், முஷ்டபிஜூர் ரஹ்மான், ஸ்டீவன் பின், பீட்டல் சிடில் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் இதற்கு முன் இந்த விருதை பெற்றுள்ளனர்.

## கோலிக்கு பதிலடி கொடுத்த தென்னாபிரிக்க அணித்தலைவர்



தென்னாபிரிக்காவிடம் தொடரை இழந்த பின்னர் பேட்டியளித்த விராட் கோலி, தென்னாபிரிக்கா எவ்வளவு போட்டிகளில் இந்தியாவில் வெற்றிக்கு அருகில் வந்துள்ளனர் என்று தனது கருத்தை தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில், தென்னாபிரிக்க அணித் தலைவர் டுபிளெசிஸ், உள்நாடு அல்லாத வெளிநாடுகளில் எங்கள் வெற்றி விகிதம் உலகிலேயே சிறந்தது. ஏனெனில் நாங்கள் தீவிரமாகவே சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தினோம்.

ஆனால், மைதானம் உள்ளிட்ட சூழ்நிலைகள் சில வேளைகளில் தீவிரமாக உள்ளது. இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள், எங்களது சுழற்பந்து வீச்சாளர்களை விட அபாரமாகத் திகழ்ந்த சூழ்நிலையிலும் கூட, இந்திய துடுப்பாட்ட வீரர்கள் திணறியுள்ளனர்.

இந்த தொடரில் கடினமான சில தருணங்கள் இருந்தன. எனினும், எங்களது வீரர்கள் ஓட்டங்கள் குவிக்கவோ, விக்கெட்டுகளை வீழ்த்தவோ தவறவில்லை.

5 நாட்களோ அல்லது 4 நாட்களோ, கிரிக்கெட்டின் அனைத்து காரணிகளும் நமக்கு கிடைத்தால் அது நல்லது.

நியூலேண்ட்சில் முதல் நாள் காலை கடினமாக இருந்தது. அதன் பிறகு, மைதானத்தின் தன்மை மாறியது.

பின்னர், கடைசி நாளில் மைதானம் மீண்டும் கடினமாக மாறியது. பந்துக்கும், மட்டைக்கும் இடையே கடும் போட்டி நிலவ வேண்டும், அதில் வெற்றி பெற போராட வேண்டும்.

கடந்த முறை, இந்தியத் தொடர்களில் இருந்து நிறைய பாடங்கள் கற்றுக் கொண்டோம். அடுத்த முறை நாங்கள் அங்கு ஆடும்போது, கடந்த முறையை விட நல்ல போட்டியளிப்போம் என தெரிவித்துள்ளார்.

## பங்களாதேஷ் உடனான போட்டியில் மத்தியூஸ் விளையாடுவது சந்தேகம்



இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ், ஜிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியின் போது காயமுற்றார்.

இதனால், இன்று நடைபெற உள்ள பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

அஞ்சலோ மத்தியூஸ் ஆறு மாதங்களுக்கு பிறகு இலங்கையின் ஒருநாள் மற்றும் ரி20 அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, பங்களாதேஷில் நடைபெறும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் அவர் கலந்து கொண்டார். ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முதல் ஆட்டத்தில் மத்தியூஸ் பந்து வீசவில்லை. மேலும், துடுப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது அவர் மிகவும் சிரமப்பட்டார்.

இதனால் இன்று நடக்க உள்ள பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் அவர் விளையாடுவாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

## இலங்கையுடனான தொடரில் விளையாடி இந்தியா நேரத்தை வீணடித்துவிட்டது

### இந்திய முன்னாள் அணித்தலைவர் கிண்டல்

தென்னாபிரிக்கா உடனான தொடரில் இந்தியா படுதோல்வி அடைந்தது எதிர்பார்த்த ஒன்று தான் என இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் பிஷன் சிங் பேடி கூறியுள்ளார்.


மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் 2-0 என இந்தியா தோல்வி அடைந்து தொடரை இழந்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்துள்ள பிஷன் சிங் பேடி, இந்திய அணி தென்னாபிரிக்க தொடருக்கு முழுவதும் தயாராகியிருக்கவில்லை. இலங்கை அணியுடன் இந்தியா பங்கேற்ற டெஸ்ட் தொடர் இந்திய வீரர்களின் நேரத்தை தான் வீணடித்தது என கிண்டலாக தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா போன்ற வலுவான அணியை எதிர்கொள்ள தயாராகாமல் பலவீனமான இலங்கையுடன் ஒன்றரை மாதமாக தொடரில் பங்கேற்றது தவறானது.

இந்தியா - இலங்கை மண்ணில் இலங்கையை வீழ்த்திய பின்பு அவர்களை மீண்டும் இந்தியா அழைத்து தொடரில் பங்கேற்றது ஏன் என புரியவில்லை.

தற்போதைய சூழலில் இந்தியா உள்நாட்டு போட்டியில் கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது வெளிநாட்டு போட்டிகளில் கவனம் செலுத்த வேண்டுமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



## அவுஸ்திரேலியா ஓபன் டெனிஸில் முகுருஜா அதிர்ச்சித் தோல்வி



கிராண்ட்சிலாம் போட்டியில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.

நேற்று காலை நடந்த பெண்கள் 2-வது சுற்று ஆட்டத்தில் 3-ம் நிலை வீராங்கனையான முகுருஜா (ஸ்பெயின்) அதிர்ச்சிகரமாக தோற்றார். சீன தைபேயை சேர்ந்த சுவி 7-6 (7-1), 6-4 என்ற நேர் செட் கணக்கில் முகுருஜாவை வீழ்த்தி 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

21-ம் நிலை [illegible] (ஜெர்மனி) 6-4, 6-1 என்ற நேர் செட் கணக்கில் குரோஷியாவை சேர்ந்த வேக்கியை தோற்கடித்தார். மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-1, 7-6 (7-4) என்ற நேர் செட் கணக்கில் சுவெஸ்டாவை (லத்வியா) வீழ்த்தி 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் 6-ம் நிலை வீராங்கனை பிளிஸ்கோவா, சபரோவா (செக் குடியரசு) ஆகியோர் வெற்றி பெற்றனர். உலகின் 19-ம் நிலை வீரரான தாமஸ் பெர்டிச் (செக்குடியரசு) 6-3, 2-6, 6-2, 6-3 என்ற கணக்கில் [illegible]லோசை (ஸ்பெயின்) வீழ்த்தினார்.

## ரொனால்டீனியோ ஓய்வுபெற்றார்



பிரேஸில் தேசிய கால்பந்தாட்ட அணியின் முன்னாள் மத்தியகள வீரரான ரொனால்டீனியோ கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். எவ்வாறெனினும், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு போட்டியிலும் ரொனால்டீனியோ விளையாடவில்லை.

37 வயதான ரொனால்டீனியோ, 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பிரேஸில் அணியில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பெல்ஜியத்திடம் வீழ்ந்த இந்தியா

இந்தியா, ஜப்பான், நியூசிலாந்து, பெல்ஜியம் ஆகிய 4 நாடுகள் பங்கேற்கும் ஹொக்கி போட்டி நியூசிலாந்தின் தவுரங்கா நகரில் நடைபெறுகிறது. இந்தியா தனது முதல் போட்டியில் ஜப்பானை எதிர்கொண்டது. இதில் 6-0 என் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில் நேற்று தனது 2-வது போட்டியில் பெல்ஜியம் அணியை எதிர்கொண்டது. முதல் காலிறுதி நேரத்தில் பெல்ஜியம் வீரர்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இந்திய தடுப்பு வீரர்கள் அவர்கள் முயற்சியை தடுத்தனர். இருந்தாலும் 8-வது நிமிடத்தில் பெல்ஜியம் முதல் கோலை பதிவு செய்தது. இதனால் இந்தியா 0-1 என பின் தங்கியிருந்தது.

பின்னர் 2-வது, 3-வது மற்றும் 4-வது காலிறுதியில் இந்தியா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 4-வது காலிறுதியில் இந்தியாவிற்கு கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி வருண் குமார் கோல் அடிக்க முயன்றார். ஆனால், பெல்ஜியம் தடுப்பாட்டக்காரர்கள் இந்தியாவின் முயற்சியை தடுத்தனர். ஆட்டம் முடிவதற்கு முந்தைய நிமிடத்தில் பெல்ஜியம் வீரர் விக்டர் வெக்னெஸ் கோல் அடிக்க இந்தியா 0-2 என்ற கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘ஒப்பரேசன்-2’ ஆரம்பம்

## ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணை முறிமோசடி விவகாரம் தொடர்பான தனது இரண்டாவது கட்ட நடவடிக்கை (ஒப்பரேசன்-2) ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக பிணை முறி மோசடி குறித்த ஆணைக் குழுவை அமைத்து, அறிக்கையைப் பெற்றுள்ளதாகவும், இரண்டாவது கட்டமாக அறிக்கையின் அடிப்படையில், சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அதனை சட்டமா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிணைமுறி மோசடி விவகாரத்தினால் கூட்டு அரசாங்கத்துக்குள் விரிசல்கள் எழுந்துள்ள சூழலிலேயே இரண்டாவது கட்ட நடவடிக்கையை தாம் ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-7)

## எனது ஆட்சிக் காலத்தில் பிணைமுறி மோசடிகள் எதுவும் இடம்பெறவில்லை

### மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

தமது அரசாங்க ஆட்சிக் காலத்தில் பிணை முறி மோசடிகள் எதுவும் இடம் பெறவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் பங்கேற்றிருந்த போது மகிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதனைப் போன்று எனது ஆட்சிக் காலத்தில் மத்திய வங்கி பிணைமுறி கொடுக்கல் வாங்கல்களில் எவ்வித மோசடிகளும் இடம்பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதனை தம்மால் உறுதிப்படுத்திக் குறிப்பிடமுடியும் என குறிப்பிட்டுள்ளார்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் தீர்மானம் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு தேவையான தகவல்கள் திரட்டப்பட வேண்டுமெனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## கால்கோள்விழாவும் மாணவ முதல்வர் சின்னம் சூட்டும் வைபவமும் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் கால்கோள்விழாவும் மாணவ முதல்வர் சின்னஞ்சூட்டும் வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாலயத்தின பழைய மாணவன் சின்னையா வேலாயுத பிள்ளை, சிறப்பு விருந்தினராக யாழ் கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருமதி. ஈஸ்வரி செல்வதயாளன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

## கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல.286 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையின் தலைவர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராஜநாயகமும் சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலனும் கலந்து சிறப்பிப்பர்.

இந் நிகழ்வில் மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (இ-7)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அழைப்பு



அமரர்

**கந்தையா இராசதுரை**

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)



கடந்த 17.12.2017 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர் **கந்தையா இராசதுரை**
அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
20.01.2018 (நாளை) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில்
ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும். அனைவரையும்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன
நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால்.

(2452)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


## இராசிபலன்

**மீனம்** — வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்தகாரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மேடம்** — வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**இடபம்** — வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும், வாய்ப்பு உண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** — பகை விலகி பாசம் கூடும் நாள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**கும்பம்** — ஆன்மீக சிந்தனைகள் வேலோங்கும் நாள், விரயங்கள் கூடும், நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | **இராசிபலன்** கிரகநிலை பிற்பகல் 1.30 மணிக்கு கும்- சந் | | ராகு |
| சூரி,சுக் கேது.சந் | | | |
| சனி புத | | குரு, செவ் | |

குறிப்பு: பூசம் ,ஆயிலியம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று அவதானமாக இருக்க வேண்டியநாள்.

**19.01.2018**

தை 06, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 06.35 மணிக்கு
துதியை முற்பகல் 11.50மணிவரை
அவிட்டம் பின்னிரவு 2.46 மணிவரை
சுபநேரம் 6.35-8.05மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை.

வளவன்

**கடகம்** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**மகரம்** — பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** — மனதிற்கினிய சம்பவம் ஒன்று இடம் பெறலாம், நண்பர்களின் சந்திப்பு உண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், தொழில் வளர்ச்சி உண்டு.

**தனுசு** — உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** — நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், தொழில் விருத்தியுண்டு.

**துலாம்** — கொள்கைப் பிடிப்புடன் செயற்படுவீர்கள், பூர்வீக சொத்துக்களால் ஆதாய முண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பிறருக்கு உதவுவீர்கள்.

**கன்னி** — தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கடன் பாக்கிகள் திடீர் என வசூலாகலாம், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு உடற்கல்வி ஆசிரியர்களின் பாடவேளையில் கவனம் செலுத்துக

## கல்வி அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண உடற்கல்வி ஆசிரியர்களின் பாடவேளையில் வடக்கு கல்வி அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினர் அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

குறித்த மகஜரில் வட மாகாண பாடசாலைகளில் உடற் கல்வியும் சுகாதாரமும் கற்பிக்கும் ஆசிரியர்களாகவும் பயிற்றுநர்களாகவும் ஒரே நபராக செயற்படும் உடற் கல்வி ஆசிரியர்களின் பாடவேளை (நேர சூசி)யில் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் 20 பாடவேளையே உடற் கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதுவும் சுமையாகவே காணப்படுகின்றது. அதற்கான காரணம் மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும், அணித் தெரிவு செய்ய வேண்டும், போட்டிக்குத் தயார்படுத்த வேண்டும், போட்டிக்கான அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் போன்றவற்றை சேகரிக்க வேண்டும், அணி விபரம் தயாரிக்க வேண்டும், வீரர்களின் போசாக்கில் கவனம் செலுத்த வேண்டும், பெற்றோர்களுடன் உடன்பாடு செய்ய வேண்டும், அதாவது கல்வி,ஒழுக்கம் போன்றவற்றுக்கு நாங்களே பொறுப்பு. போட்டி நேரத்தில் கத்தி முனையில் நிற்பது போல நிற்க வேண்டும். வெற்றி பெற்றால் பாராட்டும், தோல்வி அடைந்தால் பாடசாலை சமூகம் கேலி செய்யும்,

ஓய்வு நாட்களில் வேலை செய்ய வேண்டும். ஏனெனில் ஓய்வு நாட்களிலே போட்டி நடத்துவதற்கு அனுமதி, பாடசாலைகளில் நீண்டநேரம் வேலை செய்யும் ஆசிரியர் உடற்கல்வி ஆசிரியர் போட்டிக்கான செலவு என்பனவாகும். எனவே இவ்வாறான அழுத்தத்துடன் இன்றைய பொருளாதாரத்தில் மற்றவர்களுடன் போட்டி போட்டு வாழ முடியாத வருமானம்,

இதனைக் கருத்தில் கொள்ளாது சில பாடசாலை அதிபர்கள் 32 பாடவேளையை வழங்கி ஆசிரியர்களை அழுத்தத்திற்கு உள்ளாக்குகின்றனர்.

இதற்கு வடமாகாண கல்வி அமைச்சர் பாரபட்சம் அற்ற முறையில் பாடவேளையை வழங்கி ஆவன செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளனர். (இ-9)




## கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தின் பொங்கல் விழாவும் கலைநிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பொங்கல் விழா நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலைய முன்றலில் உப தலைவர் மாணிக்கம் மணிகலாதன் தலைமையில் இடம்பெறும் பொங்கல் நிகழ்வுகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் ஜெயச்சந்திரன் கலையரங்கில் இடம்பெறும் இதில் கரவைவுப்பர் ஸ்ரார் நடிகர் தேர்வும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ)

## இரவு வேளையில் மதுபோதையில் கூடும் இளைஞர்களால் மக்கள் மத்தியில் அச்சம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடி குடியிருப்பை அண்மித்த புதிய கடற்கரை வீதியில் இரவு வேளையில் மதுபோதையில் கூடும் இளைஞர்களால் அவ்விடத்தில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மதுபோதையில் கூடும் இளைஞர்கள் சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு இரவு வேளையில் அப்பகுதியால் செல்லும் பொதுமக்களை அச்சுறுத்துவதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் இதுவரை உரிய நடவடிக்கையெடுக்கப்படவில்லையெனவும் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-106)

## கந்தபுராண விளக்கவுரை

யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியாரால், "கந்தபுராணம்" வாராந்த விளக்கவுரை இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை இல. 700, பருத்தித்துறை துறை வீதி, நல்லூரில், அமைந்துள்ள "ஞானவேல்" ஆச்சிரமத்தில் நடைபெறும். (இ-7)

## கலாசார கூட்டம்

கோப்பாய் பிரதேச கலாசார அதிகார சபையின் விசேட கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் திருமதி சுபாஷினி மதியழகன் தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் இவ்வருடத்திற்கான கலாசார நிகழ்வுகள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதால் கோப்பாய் பிரதேசத்திலுள்ள அனைத்து கவிஞர்களையும்கலந்து கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.சிறிதரன் கேட்டுள்ளார்.(இ)



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் 101 ஆவது பிறந்தநாள் நிகழ்வை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை பாஷையூர் மற்றும் குருநகர் எம்.ஜி.ஆர்.நற்பணி முன்னேற்றக்கழகத்தினரின் ஏற்பாட்டில் பாஷையூர் மற்றும் குருநகரிலுள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்:- பாஷையூர், குருநகர் செய்தியாளர்கள்)

## இலவச யோகா தியான கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இலவச யோகா தியான கற்கை நெறியின் புதிய பிரிவு நாளை 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளதுடன் இக் கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களில் காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை ஆண்களுக்கும் காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை பெண்களுக்கும் இரு பிரிவுகளாக இடம்பெறும்.

இலவச யோகா தியானக் கற்கைநெறியை முழுமையாக பூர்த்தி செய்யும் அனைவருக்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். இக்கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் இன்றும் நாளை 20 ஆம் திகதியும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் அலுவலக நேரத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினர் அறிவித்துள்ளனர். (இ-10-102)

## குரு சமர்ப்பணம் நாளை

(யாழ்ப்பாணம்)

குருவும் வயலின் வித்துவானுமாகிய அமரர் கலா கீர்த்தி பிரம்மஸ்ரீ. சி.சர்வேஸ்வரசர்மாவின் 90ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சிஷ்யர்கள் வழங்கும் குரு சமர்ப்பணம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் இந்து கலாசார அமைச்சின் பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பீடபகுதி நேரவிரிவுரையாளர் சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீ.வாமதேவன், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேல் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8)

## வளர்மதி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் நிலையத்தலைவர் அ.சக்திவேல் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ.வலி.வடக்கு பிரதேச சபைச் செயலாளர் இ.பகீரதன், கௌரவ விருந்தினர்களாக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவயோகம் செல்வவிநாயகம், குரும்பசிட்டி கிழக்கு கிராம அலுவலர் ஜெயவிந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (இ-8)



எம்.ஜி.ஆரின் 101 ஆவது பிறந்ததினம் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி எம்.ஜி.ஆர். நற்பணி மன்றத்தினரால் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன், எம்.ஜி.ஆர்.உருவச் சிலைக்கு மாலை அணிவித்ததைத் தொடர்ந்து நற்பணி மன்றத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (படங்கள்:-மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக விழா

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணியின் ஏற்பாட்டில் நாடக விழா நாளை 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாக தமிழ்க் கோட்டத்தில் இடம்பெறும். இந் நிகழ்வில் "எழிலுரையினை நாடகமும் மனிதமும்" எனும் தலைப்பில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க. இ.கமலநாதன் வழங்குவார். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பாக கலாநிதி க.ரதிகரனின் நெறியாள்கையில் அன்ரன் செக்கோவின் "தான் விரும்பாத் தியாகி" எனும் நாடகமும் சித்தி விநாயகர் கலைமன்றத்தின் தயாரிப்பில் "மயானத்து மன்னன்" எனும் இசை நாடகமும் அரங்கேற்றப்படும். (இ-7)

# பொலிஸார் தாக்குதல்

## மின்சார சபை ஊழியர்கள் ஐவர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

மின்சார சபை ஊழியர்கள் ஐவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மின்சார சேவைகள் சங்கத்தின் ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை 9 மணித் தொடக்கம் நாடுதழுவிய பணிப் புறக்கணிப்பை ஆரம்பித்துள்ளதால் சகல மின்சார சபை ஊழியர்களும் இதில் பங்கெடுக்குமாறும், மின்சார சபையில் இடம்பெறும் ஊழல், மோசடிகளுக்குத் தீர்வினைப் பெற்றுத்தராமல் பொலிஸார் நடத்திய இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது தொழிற்சங்க ஊழியர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்தலைக் கண்டித்தே இந்த பணிப்புறக் கணிப்பு முன்னெடுக்கப்படுவதாக மின்சார சேவைகள் சங்கத்தின் ஒன்றிணைந்த தொழிற் சங்கத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார். (இ-7)

# மூன்று நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புதிய பண்பாட்டுத் தளத்தின் ஏற்பாட்டில் கலாநிதி. ந.இரவீந்திரனின் மூன்று நூல்கள் வெளியீடும் விமர்சன ஆய்வு அரங்கும் நாளை மறுதினம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வெலிங்டன் தியேட்டர் சந்தி அருகாமையிலுள்ள S.D.B. வங்கிக் கட்டட மேல் மாடியில் வை.வன்னிய சிங்கம் தலைமையில் இடம்பெறும். (இ-7)


# தவறிவிட்டது

நாவலர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு புவனேந்திரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (2448)

தொடர்புகளுக்கு:
071 860 6576

குருவும் வயலின் வித்துவானுமாகிய

**அமரர் கலாகீர்த்தி பிரம்மஸ்ரீ.சி.சர்வேஸ்வரசர்மா**

அவர்களின்

**90** ஆவது பிறந்தநாளை முன்னிட்டு
சிஷ்யர்கள் வழங்கும்

# குரு சமர்ப்பணம்



**இடம்:**
**இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி,**
**கல்லூரி வீதி,**
**நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

**காலம்:**
**20.01.2018 சனிக்கிழமை**

**நேரம்:**
**பி.ப 3 மணி-7.00 மணி**

(2451)

# கனடாவில் கல்வி, தொழில் மற்றும் வாழ்வு

**கனேடிய முன்-பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டம்**
(ஒன்டாரியோ கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது)

**உடனடி நேர்முகத் தேர்வு மற்றும் தெரிவு**

குறைந்த கல்வித் தகுதி: க.பொ.த சாதாரண தர அல்லது அதற்கு இணையானது.

**வயதெல்லை:** 17 வயது முதல் 30 வயது வரை
**விசேட சலுகைகள்: IELTS** தேவையில்லை/ உள்நாட்டு அறவீடுகள் இல்லை.
**திகதி மற்றும் நேரம்:** 23.01.2018/ காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை.

**இடம்: கிறீன்கிராஸ் ஹொட்டல் (யாழ்ப்பாணம்)**

மேலதிக விபரங்களுக்கு:
**SIBM** தனியார் கல்வி நிறுவனம்,
128. ஹைலெவல் வீதி, நுகேகொடை, இலங்கை
**தொ.இல: 0113 370 397** **e: study@sibm.edu.lk**
**w: www.sibm.edu.lk**
(74)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த **அமரர்கள் திரு. கந்தையா இராசையா திருமதி. இராசையா சரஸ்வதி** ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் மீள் குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் உடுவில் பிரதேச செயலகத்தால் அமைக்கப்பட்ட **ராஜா பிளாசா மாதிரிக் கிராம 30 வீட்டுத் திட்ட**

# திறப்பு விழா



**காலம் : 20.01.2018 (சனிக்கிழமை)**
**நேரம் : மாலை 3.30 மணி**
**இடம் : விவசாய வீதி, வடக்கு புன்னாலைக்கட்டுவன்**

**தலைமை:**
**செந்தில்நாதன் சொபிசன்**
உறுப்பினர் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும்(தலைவர் அகில இலங்கை கம்பன் கழகம்)



**பிரதம அதிதிகள்:**
**உயர்திரு நா. வேதநாயகன்** (யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்)
**பொன்மணம் பேரானன், பதிவரோதயன்**
**திரு.திருமதி. இராசையா குவேந்திரநாதன் ரஞ்சினிதேவி**
(உரிமையாளர் ராஜா பிளாசா)

**சிறப்பு அதிதிகள்:**
**உயர்திரு சு.முரளீதரன்** மேலதிக அரசாங்க அதிபர் (காணி) யாழ். மாவட்டம்.
**திருமதி மதுமதி வசந்தகுமார்** பிரதேச செயலர், வலி. தெற்கு (உடுவில்)
**உயர்திரு ந. நந்தரூபன்** (பொறியியலாளர்) (சாருகஜா கட்டட ஒப்பந்தகாரர்)

தொடர்ந்து நடைபெறும் உலகப் புகழ் கோண்டாவில் **நாதஸ்வர இளவரசன் பஞ்சமூர்த்தி குமரன் குழுவினரின் இசைநாத சங்கமம்** நடைபெறும்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(சி-126) **விழாக் குழுவினர்**

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/நிரந்தரதொழில்<br>தொ.இ: B/8179 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/7414 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/வியாபாரம்<br>தொ.இ: B/8180 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:33 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/7415 |
| பிறப்பு: 1986RC<br>உயரம்: 185cm<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>தொ.இ: B/8181 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.COM/<br>ஆசிரிய உதவியாளர் கனடா<br>தொ.இ: G/7420 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்A/L/பிரான்ஸ் NOTPR<br>தொ.இ: B/8182 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: சூரி செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7421 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் முல்லை.மாவட்டத்தில்

# 274 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்

## உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத் தகவல்படி

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள நான்கு பிரதேச சபைகளுக்கான தேர்தலின் போது 41 வட்டாரங்களில் போட்டியிடும் 710 வேட்பாளர்களில் 274 பெண் வேட்பாளர்கள் போட்டியிடுவதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தலின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய 4 பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இதன்போது, மாந்தை கிழக்குப் பிரதேச சபைக்கான 8 வட்டாரங்களில் 128 வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற நிலையில், இவர்களில் 54 வேட்பாளர்கள் பெண்களாக உள்ள நிலையில் தமக்கான 13 பிரதேச சபைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 5 ஆயிரத்து 184 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இதேபோன்று, துணுக்காய் பிரதேச சபைக்கான 8 வட்டாரங்களில் 112 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், இவர்களில் 49 பேர் பெண்களாக உள்ள நிலையில் தமக்கான 13 பிரதேச சபை உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 7 ஆயிரத்து 137 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இவ்வாறான நிலையில், கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கான 13 வட்டாரங்களில் 264 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், இவர்களில் 92 பேர் பெண்களாக உள்ள நிலையில், தமக்கான 21 பிரதேச சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 26 ஆயிரத்து 773 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேபோன்று, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான 12 வட்டாரங்களில் 206 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில் இவர்களில் 79 பேர் பெண்களாக உள்ள நிலையில், தமக்கான 20 பிரதேச சபை உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 33 ஆயிரத்து 867 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# முப்பது தேர்தல் விதிமுறை மீறல்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவாகின

(பனிக்கன்குளம்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் நேற்று வரையிலான காலப்பகுதியினுள் முப்பது சம்பவங்கள் முறைப்பாடாக கிடைக்கப் பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் பல்வேறு கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று வரையான காலப்பகுதிவரை முப்பது தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளது. மக்கள் தேர்தல் முறைப்பாடுகள் தொடர்பில் 021 320 4352 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார். (2-281)

# வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

(குருமன்காடு)

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதாக நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் எஸ். சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு வாடி வீடு விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது. இவ் வருடாந்தப் பொதுக்கூட்டத்திலும் புதிய நிர்வாகத் தெரிவிலும் கலந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (2-250)

# கால்கோள் விழா

(பனிக்கன்குளம்)

2018 ஆம் கல்வியாண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றுவருகின்றது.

கல்லூரியின் முதலவர் தா.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா கோட்ட கல்விப் பணிப்பாளர் எம்.பி. நடராசா , சிறப்பு விருந்தினர்களாக மும்மதங்களின் குருக்கள், கல்லூரியின் பிரதி அதிபர் கு.முல்லைக் குமார் ,ஆரம்பப் பிரிவு அதிபர் ஞானமதி மோகனதாஸ், பாடசாலை அபி விருத்திக் குழுவின் உறுப்பினர் செ.சந்திர குமார் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாகிகள், இணைப் பாடவிதான பிரதி அதிபர் திருமதி எஸ். ரவீந்திரன் , மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் , மாணவர்கள் , பழைய மாணவர்கள் , பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-28)

# பல்கலைக்கு தெரிவான அதிவிசேட சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு



(பரந்தன்)

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பாடசாலை யில் இடம் பெற்றது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 53 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளதோடு, இதில் நான்கு மாணவர்கள அதிவிசேட (மெறீட்) சித்தியுமடைந்துள்ளனர்.

இவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்துள்ளனர். (2-312)




# தங்கம் தேடும் அகழ்வுப் பணி வேறு தினத்திற்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைக்கப்பட்ட தங்கம் இருப்பதாக தெரிவித்து நேற்று முன்தினம் அகழ்வுப்பணி இடம் பெற்றன.

முல்லைத்தீவு நீதிமன்ற அனுமதியுடன் மாவட்ட நீதிபதி எஸ். லெனின்குமார் முன்னிலையில் இராணுவம் பொலிஸ் விசேட அதிரடிப்படை கடற்படை ஆகியோர் இணைந்து இந்த அகழ்வுப்பணியை முன்னெடுத்தனர்

சுமார் 3 மணி நேரத்துக்கு மேலாக இப்பணி நடைபெற்றது தொடர்ந்து அகழ்வு பணிக்கான இயந்திரத்தின் அளவு போதாமையினால் பெரிய ரக ஜே .சி .பி இயந்திரத்தை ஒழுங்கு செய்துவிட்டு வருமாறு நீதிபதி பணித்துள்ளார் அத்தோடு தோண்டப்பட்ட இடம் மீண்டும் மூடப்பட்டுள்ளது பிறிதொரு தினத்தில் இந்த அகழ்வு பணி தொடரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-281)

# மாணவர்கள் 130 பேருக்கு புத்தகப்பைகள்,கற்றல் உபகரணங்கள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அமரா ஒன்றியத்தின் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிள்ளைகள் 130 பேருக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கடந்த கால யுத்தநிலைமைகளின் போது தந்தை ,இறந்த தந்தை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தந்தை காயமடைந்து அங்கவீனமடைந்துள்ள மற்றும் வேறு பல காரணங்களினால் பெண் தலைமைத்துவமாகியுள்ள குடும்பங்களின் பாடசாலை செல்லும் மாணவர்கள் 130 பேருக்கு புதிய கல்வியாண்டிற்காக புத்தகப்பைகள் மற்றும் அப்பியாசக் கொப்பிகளை தந்துதவுமாறு அமரா குடும்பத் தலைமை தாங்கும் பெண்கள் ஒன்றியத்தினால் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து அண்மையில் புதிய புத்தகப்பைகள் மற்றும் அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன. (2)

# விசுவமடுக்குளத்தின் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை குறைந்தளவு விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்

## முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

முல்லைத்தீவு முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட விசுவமடுக்குளம் புனரமைக்கப்பட்டு அதற்கான ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்ட போதும் அதனைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகள் முழுமையாக ஆர்வம் காட்டவில்லை என நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள மேற்படி விசுவமடுக் குளம் கடந்த 2012 ஆம் ஆண்டு 90 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், செயலிழந்து காணப்பட்ட அதன் ஏற்று நீர்ப்பாசனத்திட்டமும் மீள்புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில்குறிப்பிட்ட சில பகுதிகள் தவிர ஏற்றுநீர்ப்பாசனத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் அதனை உரியமுறையில் விவசாயிகள் பயன்படுத்தாது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் முத்தையன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் தொடர்புகொண்டு வினவிய போது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான விசுவமடுக் குளத்தின் கீழ் ஏற்று நீர்ப்பாசனம் மற்றும் நீர்ப்பாசனம் மூலம் 808 ஏக்கர் நிரப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடியதாகவுள்ளது.

ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் இயந்திரம் எரி பொருள் மூலம் இயக்கப்படுகின்றது.

முழுமையான விவசாயிகளும் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் போது அதற்கான எரி பொருள் செலவு குறைவாகவே இருக்கும். குறைந்தளவு விவசாயிகள் இதனைப் பயன்படுத்தும் போது எரிபொருள் செலவு கூடுதலாகக் காணப்படும். குறிப்பிட்ட சில விவசாயிகள் மட்டுமே இதனைப்பயன் படுத்தி வருகின்றனர் எனவும் நீர்ப்பாசனத் திணைக்கள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு

# தற்காலிக ஆள் அடையாள அட்டையை பெற முடியும்

## வவுனியா மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்க தற்காலிக ஆள் அடையாள அட்டைகளை பெற முடியும் என வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் டி.சி.அரவிந்தராஜ் தெரிவித்துள்ளார்.**

தேர்தல் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது வாக்குகளை அளிப்பதற்காக ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் அத்தியாவசியமானதாகும். இதற்காக தேசிய ஆள் அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுப்படியான சாரதி அனுமதிப் பத்திரம், ஓய்வூதியர் அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, மத குருமார் அடையாள அட்டை, தேர்தல் ஆணைக் குழுவால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை என்பவற்றை பயன்படுத்த முடியும்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய மேற்கூறிய ஆவணங்கள் இல்லாதவர்கள் கிராம அலுவலர் ஊடாக தேர்தல் ஆணைக்குழுவின் தற்காலிக ஆள் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே தேவைப்படுவோர் தமது பகுதி கிராம அலுவலர் ஊடாக அதனைப் பெறுவதன் மூலம் வாக்களிக்க முடியும் எனத் தெரிவித்தார்.(2-250)

# பொதுத்தேவைக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் தனியாரொருவரினால் ஆக்கிரமிப்பு

## விடுவித்துத்தருமாறு பிலவுக்குடியிருப்பு மக்கள் கோருகின்றனர்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு பகுதியில் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் பொதுக்கிணறு என்பவற்றை விடுவித்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு பகுதியில் 83 குடும்பங்களுக்கு சொந்தமான 42.5 ஏக்கர் காணிகள் கடந்த ஆண்டு மார்ச் மாதம் படையினர் வசமிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் இக்காணிகளில் மக்கள் மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதியில் உள்ள பொதுக்கிணறு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பொதுத்தேவைக்கென ஒதுக்கப்பட்ட காணி என்பவற்றை கேப்பாப்பிலவு பகுதியைச் சேர்ந்த தனியார் ஒருவர் ஆக்கிரமித்துள்ளதாகவும் இது தொடர்பில் ஏற்கனவே உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் இதனை விடுவித்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# கிளி.பனை அபிவிருத்திச்சபையினூடாக

# கடந்தாண்டு 0.80 மில்லியன் ரூபா நிதியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பனை அபிவிருத்திச் சபையினூடாக கடந்தாண்டு 0.80 மில்லியன் ரூபா நிதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பனை அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத் தொடர்ந்து பனை மீள் நடுகைத் திட்டங்கள் பனை சார் கைப்பணி உற்பத்தி பொருட்கள் உற்பத்தி செய்தல் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் கடந்த 2017ஆம் ஆண்டில் 0.80 மில்லியன் ரூபா நிதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது மாதிரிப் பண்ணைகளை அமைப்பதற்கு 0.5 மில்லியன் ரூபாவும். பனை சார் கைப்பணி பயிற்சிகளை வழங்குவதில் 0.60 மில்லியன் ரூபாவும் பனை சார் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சி மற்றும் போட்டிகளை நடத்துவதற்கு 0.05 மில்லியன் ரூபாவும் உற்பத்தி நிலையங்களைத் தரமுயர்த்துவதற்கு 0.3 மில்லியன் ரூபாவும் கற்பகம் விற்பனை நிலையத்தை நிறுத்துவதற்காக 0.2 மில்லியன் ரூபாவும் அலுவலக புனரமைப்பு பணிகளுக்காக 0.7 மில்லியன் ரூபாவும் என கடந்த ஆண்டில் 0.80 மில்லியன் ரூபா நிதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# கிளிநொச்சி வலய பாடசாலைகளில் ஆசிரியர் வளம் ஓரளவு பூர்த்தி

## வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர் வளம் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தற்போது 32 ஆயிரத்து 432 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் இரண்டாயிரத்து 36 ஆசிரியர்கள் மேற்படி மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போதைய ஆசிரிய வளங்கள் தொடர்பில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு வினவிய போது தற்போது 32 ஆயிரத்து 432 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

ஆசிரியர்கள் பற்றாக் குறையென்பது பிரச்சினையாக இல்லை. தற்போது ஆசிரியர் வளம் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அடுத்த பெப்ரவரி மாதத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் ஆசிரிய இடமாற்றத்தில் பாதிப்புக்கள் ஏற்படுமா? என்பது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் கிளிநொச்சி கல்வி வலயத்தின் ஏழு வருடங்கள் சேவைக்காலத்தை பூர்த்தி செய்த 84 ஆசிரியர்களும் எதிர்வரும் பெப்ரவரி மாதத்துடன் மூன்று வருடங்கள் சேவையை பூர்த்தி செய்த 80 ஆசிரியர்களும் தமது சேவையை நிறைவு செய்து இடமாற்றத்தில் செல்லும் போது அதற்கான பதில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-315)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பவர்கள் 25,26 இல் வாக்குப்பதிவு

## தவறியவர்களுக்கு பெப்ரவரியில் வாக்குப்பதிவு

(பனிக்கன்குளம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தபால் மூல வாக்களிக்க முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 958 பேர் தகுதி பெற்றுள்ளதாகவும் இவர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் கடந்த 12 ஆம் திகதி அஞ்சல் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாருக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி வாக்கு பதிவு இடம்பெறும் என முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஏனைய தபால் மூல வாக்களிப்பவர்களுக்கு 25 ஆம் 26 ஆம் திகதிகளில் வாக்கு பதிவு நடைபெறும். இவற்றில் வாக்களிக்க தவறியவர்களுக்கு பெப்ரவரி மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தமது வாக்கை பதிவு செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைக்குமான தேர்தலுக்காக மாவட்டம் முழுவதும் 72 ஆயிரத்து 961 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளதாகவும் இவர்களுக்காக 134 வாக்களிப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு இடம் பெறவுள்ளதாகவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை வாக்காளர்கள் தமது வாக்குகளை பதிவுசெய்ய முடியும். வாக்கு எண்ணும் பணிகள் வாக்களிப்பு நிலையங்களிலேயே எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

இறுதியாக மாவட்ட செயலகத்துக்கு வாக்குகள் எடுத்துவரப்பட்டு சபைகளுக்கான இறுதி முடிவுகள் அறிவிக்கப்படும்என அவர்மேலும் தெரிவித்தார். (2-[illegible])

# முல்லைத்தீவு மாவட்டத்தில்

# நெற்செய்கையில் மடிச்சுக்கட்டித் தாக்கம்

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தில் நெற்செய்கையில் நெல் மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகளவில் கணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பூச்சியை அவதானித்து உரிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விவசாயிகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட விவசாயத்திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் (பயிர் பாதுகாப்பு) ஆர்.தர்மதேவன் அறிவிறுத்தியுள்ளார்.

இதற்கமைவாக, குமுழமுனை, துணுக்காய், பாண்டியன்குளம், புதுகுடியிருப்பு, பாலிநகர் ஆகிய இடங்களில் இத்தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மடிச்சுக்கட்டியின் தாக்கத்தின் அறிகுறிகளாக

இலைகள் நீள் வாட்டில் மடிக்கப்பட்டிருக்கும், புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதனால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும், தீவிரமான தாக்குதலின்போது முழு நெல்வயலும்வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். இலைகள் நீள்வாட்டில் சுருண்டு, புழுக்கள் அதனுள்ளே இருக்கும்.

முட்டைகள்தட்டையானவடிவத்தில், மஞ்சளான வெள்ளை நிறத்தில் காணப்படும். புழுக்கள் பச்சையான நிறத்தில் ஒளி கசியும் தன்மை கொண்டு விளங்கும். முன்மாற்புக் கேடயம் நுனி நோக்கி நிமிர்ந்தும், பக்கவாட்டில் உருளையாகவும் காணப்படும்.

அந்துப் பூச்சியானது மஞ்சளான பழுப்பு நிற இறக்கைகளைக் கொண்டது. அதில் நிறைய கறுப்பு அலை போன்ற கோடுகள் நடுவிலும், இறக்கைகளின் ஓரத்தில் கறுப்பு நிற பட்டையான கோட்டுடனும் காணப்படும்.


கட்டுப்பாட்டுமுறை

சிபாரிசு செய்யப்பட்ட பசளை அளவை பகுதி பகுதியாக பிரித்து இடவும். மேலதிக நைதரசன் பசளை இடுவதை தவிர்க்கவும்.

வரம்புகளைசீராக்கிஅதனை சுத்தமாக வைத்தல் மற்றும் புல் இனக்களைகளை நீக்குதல் வேண்டும்.

வேப்பெண்ணெய்க் கரைசலை பின்வரும் அளவில் தெளிக்கலாம்.

3 லீற்றர்வேப்பெண்ணெய் மற்றும் 200 மில்லி லீற்றர் சோப் கரைசல் ஆகியவற்றை 200 லீற்றர் தண்ணீரில் கரைத்து கிடைத்த கரைசலை ஒரு ஏக்கருக்கு விசிறவும். (2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# "வண்ணத்துப்பூச்சி விளைவு" (கேயாஸ் தியரி)

நீங்கள் எல்லோரும் "தசாவதாரம்"படம் பார்த்திருப்பீர்கள். ஆனால், அந்தப் படத்தில் ஒருவண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பை நீங்கள் நிச்சயம் பார்த்திருக்க மாட்டீர்கள் அல்லது அவதானித்திருக்கத் தவறியிருப்பீர்கள். நான் எழுதப்போவது





அந்த வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பைப் பற்றித்தான். "வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பைப் பற்றி எழுத என்ன இருக்கிறது?"என்று நீங்கள் கேட்டால், அதற்கு என் பதில், "நிறையவே இருக்கிறது" என்பதுதான்.

கேயுாஸ் என்ற கிரேக்க வார்த்தைக்கு "ஏதும் இல்லாத ஒன்று" (சூன்யம்) என்பது பொருள். இந்த கேயாஸ் தியரி - ஒழுங்கற்ற தன்மையில் இருக்கும் ஒரு ஒழுங்கை விளக்குகிறது.

புரியவில்லையா? இந்த வருடத்தில் மழைகாலத்தில் ஒரு குறிப்பிட்ட திகதியில் மழை பெய்கிறது என்றால், அடுத்த ஆண்டும் அதே திகதியில் மழைபெய்யும் என்று உறுதி கிடையாது. வானிலை ஒரு நாள் போல் ஒரு நாள் இருக்காது என்றாலும், வருடம் முழுவதும் பார்க்கும் போது மழையோ புயலோ காற்றோ வருவதில் ஒரு ஒழுங்கு இருக்கும். ஏப்ரலில் வெய்யில் ஒகஸ்டில் மழை டிசெம்பரில் குளிர். அன்றாட வானிலையை நாம் சரியாக கணிக்க முடியாவிட்டாலும், வானிலை ஒரு ஒழுங்கற்ற ஒழுங்கில் தான் இயங்குகிறது. இதுதான் கேயாஸ்.

1970இல் Lawrance என்பவர் "வண்ணத்துப்பூச்சி நிகழ்வை" முதலில் விளக்கினார். அவர் கேட்ட கேள்வி "பிரேசிலில் ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு, அமெரிக்காவின் டெக்ஸாஸில் புழுதிப்புயலை ஏற்படுத்துமா?"

வண்ணத்துப் பூச்சிக்கும், சூறாவளிக்கும் சம்பந்தமா? சுத்தப் பைத்திய காரத்தனமாக அல்லவா இருக்கிறது. என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் அது உண்மை.

தசாவதாரம் படத்தை அவதானமாகப் பார்த்திருந்தீர்களானால், படத்தின் எழுத்து ஆரம்பிக்கும் போது, ஒரு வண்ணத்துப்பூச்சி சிறகடித்துச் சென்று கொண்டே இருக்கும். அதுபடத்தின் இறுதியில் மீண்டும் வரும். இதை அவதானிக்காதவர்கள், இங்கு படித்ததும் ஒரு தரம் மீண்டும் தசாவதாரம் படத்தைப் பாருங்கள்.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தான், தசாவதாரம் படத்தை எடுத்திருந்தனர். அதாவது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்க சோழன் என்பவன் சைவ, வைணவ சண்டையினால், விஸ்ணுவின் சிலையைக் கடலில் போட, அதன் விளைவாக 2004 ஆம் ஆண்டு சுனாமி உருவாகியது என்பது தான் படத்தின் கதை. அதில் வரும் இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு "கிருமிகண்ட சோழன்" என்னும் பட்டப்பெயர் இருந்ததால், கிருமியும் படத்தில் சேர்த்துவிட்டது அவர் கதை சொல்லும் பாணிக்கும், புத்திசாலித்தனத்திற்கு சான்றாகியது.

சிந்தித்து பாருங்கள்..

1)உணவகத்தின் (Hotels) அருகில் குடியிருப்பவர்களுக்கு வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் வருமா?

2)காருக்கு கருப்பு பெயிண்ட் அடித்தால் அதிகமாகபெட்ரோல் செலவழியுமா?

3)அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் எடுக்கப்பட்ட ஒரு முடிவால், உங்கள் வீட்டில் உங்கள் அம்மா தயாரித்தரசத்தின் சுவை குறையலாம்.

உணவகத்தின் அருகே குடியிருப்பவர்கள் எப்போதும் உணவின் மணத்தினை நுகர்ந்த படி இருப்பார்கள், இதனால் அனிச்சை செயலால் அவர்களது வயிற்றின் செரிமானமண்டலம் தூண்டப்பட்டு உண்ணாமல் இருக்கும் போதும் வயிற்றில் அமிலங்கள் சுரந்தபடி இருக்கும். இது அவர்களுக்கு அல்சர் போன்ற வயிற்றுப் பிரச்சனைகளை உருவாக்கும்.

அதேபோல் தான் மற்றநிறங்களை விட கருப்பு அதிகமாக வெப்பத்தை கிரகிக்கும் தன்மை உள்ளது. இதனால் வெய்யில் காலங்களில் கருப்பு நிறகார்கள், உள்புறத்தில் குளிர்ச்சியை நிலைப்படுத்த, ஏசி அமைப்பை அதிகமாக பயன்படுத்துவதால், எரிபொருளை வெள்ளை நிறகார்களை விட அதிகமாக பயன்படுத்துகின்றன.

George W. Bush ஈராக்கில் Saddam Hussein மீது படையெடுத்ததால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணை விலை ஏறி. அதனால் நமது ஊரில் டீசல் விலை ஏறி, அதனால் சரக்குலாரிகளின் வாடகை உயர்ந்து, அதனால் காய்கறிகளின் விலை உயர்ந்து, நம் வீட்டில் அம்மா வழக்கமாக ஒரு கிலோ தக்காளி வாங்கும் காசில் கால் கிலோ மட்டுமே வாங்க முடிந்து, ரசத்தில் தேவையான அளவு தக்காளி சேர்க்காததால் ரசம் சுவை குறைந்திருக்கலாம்.


எனவே தான் சொல்கிறேன், பிரேசிலில் ஒரு வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பு, டெக்ஸாஸில் புழுதிப்புயலை ஏற்படுத்தலாம் என்று...!!

ஆனால், அநேகமாக வண்ணத்துப்பூச்சி விளைவுகள் பற்றித் தெரிந்தபலருக்கு.அது சார்ந்தவேறு விளைவுகளும் இருப்பது தெரியாது, அப்படி உள்ளவேறு விளைவுகள் சிலபற்றியும் சொல்கிறேன். அவை......!

1. டொமினோ விளைவு (Domino effect)

2. ஸ்நோபால் விளைவு (Snow ball effect) ஆகும்.

வண்ணத்துப்பூச்சி விளை வுடன் சேர்த்து. இந்த மூன்று விளைவுகளையம் சங்கிலித் தொடர் விளைவுகள் (Chain reactions) என்ற பொதுவான தன்மைக்குள் அடக்க முயற்சிக்கலாம்.



இவற்றை எல்லாம் விளக்கமாக எழுதினால் நீங்கள் ஒட்டுமொத்தமாக இந்தக் கட்டுரையையே வாசிக்காமல் போய்விடும் அபாயம் உள்ளதால், மிகச் சிறிய விளக்கங்கள் மட்டும் கொடுத்து விலகுகிறேன்.

சங்கிலித் தொடர் விளைவு (Chain reaction) என்றால், ஒரு செயலால் (action) தொடர்ச்சியாக அடுக்கடுக்காக உருவாக்கப்படும் தாக்கங்கள் (reactions) சங்கிலித் தொடர் விளைவு ஆகும். அணு குண்டு வெடிக்கும்போது, அணுக்கள் இந்தச் சங்கிலித் தொடர் விளைவுகளாலேயே சக்தியை வெளிப்படுத்துகின்றன.

டொமினோ விளைவு என்றால், பல சிறிய டொமினோ கட்டைகளை ஒன்றன் பின்னாக வரிசையாக அடுக்கி, அப்புறம் ஒன்றைத் தட்டும் போது, எல்லாமே அடுத்தடுத்து விழும். இ,ந்தடொமினோ விளைவினால் தான், ஒருவர் பேசுவது எமது காதில் ஒலியாகக் கேட்கின்றது எனச் சொல்லலாம்.

ஸ்நோபால் விளைவு என்றால், இதுவும் கிட்டத்தட்ட டொமினோ விளைவு போன்றது தான், ஆனால் இங்கே அதற்கும், இதற்கும் உள்ள வித்தியாசம் என்ன வென்றால், ஒரு செயலால் உருவாக்கப்பட்ட தாக்கத்தின் விளைவுஎட்டுத் திசையிலும் பரவி ,ருக்கும். உதாரணமாக, ஒரு பனிபடர்ந்த மலையின் உச்சத்தில் இருந்து ஒருகையளவு உள்ள ஒரு பனி உருண்டை கீழே விழும் போது, அந்தச்சிறியபனி உருண்டை. உருண்டு கீழேபோகும் போது அண்மையில் இருக்கும் பனிகளையும் தன்னுடன் சேர்த்து, போகப்போக பெரிய பனி உருண்டையாக மாறுகின்றது. கடைசியில் இது மிகப்பெரிய பனிச்சரிவைக் கூட ஏற்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.

நிறைவாக சொன்னால், நாம் செய்யும், செய்யத் தவறும் சின்னச் சின்ன செயல்களினால் பாரியவி ளைவொன்றை எதிர்கொள்ள நேரிடும். அதுசாதகமானதாகவோ அல்லது பாதகமானதாகவோ இருக்கலாம். அதை ஏற்றுக்கொள்வோம். இவ் உண்மையை ஞாபகம் கொள்ளுங்கள்: நாம் அலட்சியமாக எண்ணும் எண்ணங்கள் நம் வாழ்வை மாற்றலாம்.

காலிங்கராசா ஹரிச்சந்திரா
தொழிநுட்ப அலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானதுறை,
விஞ்ஞானபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 202

ஜேனிடம் 2 சிவப்பு, 4 நீலம் மற்றும் 5 பச்சை மாபிள்கள் உள்ளது. ஒவ்வாரு வண்ணத்திலும் குறைந்தபட்சம் ஒரு மாபிள் எடுத்ததை உறுதிப்படுத்த குறைந்தது எத்தனை மாபிள்களைப் பையிலிருந்து அவர் எடுக்க வேண்டும்?

புதிர் 201இற்கான விடைகளை 15.01.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசதிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான
சங்கம்-பிரிவு A,
84,கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 200க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ஜெரால்ட் ஜீவதாசன்
யோவான் அருணன்
72,கோவில் வீதி
யாழ்ப்பாணம்

**புதிர் 201 க்கான கேள்வியும் விடையும்:**
"Discovery of the Child" எனும் நூலை எழுதியவர் யார்?
Maria Montessori

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 202**

சரியான விடை:-........................
முழுப்பெயர்:-........................
முகவரி:-........................
தொ.பே. இல:........................
கைபேசி:........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டுப் பலன்கள் -2018



பண்பாட்டை வளர்க்கப் பாடுபட வேண்டும் என்று சொல்லும் மீன இராசி வாசகர்களே!

புத்தாண்டு தொடங்கும் போது அஷ்டமத்தில் குருவும், பத்தாம் இடத்தில் சனியும் சஞ்சரிக்கிறார்கள். அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கத்தால் மன அமைதிக் குறைவும், பொருளாதார வளர்ச்சியில் திருப்தியின்மையும் ஏற்படும் என்று சொல்வார்கள். ஆனால் உங்கள் சுய ஜாதகத்தில் கிரக நிலைகள் நன்றாக அமைந்து. யோகம் தரும் தசாபுத்தி நடைபெறுமேயானால் எதற்குமே கவலைப்படத் தேவையில்லை.

முழுவதும் வேண்டிய நற்பலன்கள் கிடைக்க நீங்கள் எந்த வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும் என்பதை அறிந்து வைத்துக் கொண்டால் எதிர்காலத்தை இனிமையானதாக அமைத்துக்கொள்ள இயலும்.

**புத்தாண்டின் தொடக்க நிலை!**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு. அஷ்டமத்தில் சஞ்சரித்து 2,4,12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்குப் பலன் அதிகம். ஆனால் சனி கிரகத்திற்கோ பார்க்குமிடத்தைக் காட்டிலும் இருக்கும் இடத்திற்குப் பலன் அதிகம். அந்த அடிப்படையில் குருவின் பார்வை வாக்கு தனம், குடும்பம், வாகனம், சுகம், இடம், தாய், கட்டடப் பணி, பயணங்கள் போன்றவற்றை குறிக்கும் இடங்களை எல்லாம் குரு பார்ப்பதால் நற்பலன்கள் கிடைக்கப்போகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.

தாய், தந்தையரின் ஆதரவு திருப்திகரமாக இருக்கும். உங்கள் முன்னேற்றத்திற்கு தேவையான ஒத்துழைப்புகளை செய்வதாகச் சொல்லுவர். உங்களுக்குப் பெண் குழந்தைகள் இருந்தால் அவர்களின் கல்யாணச் செலவுகளை தாங்களே ஏற்றுக் கொள்

கௌரவமும், அந்தஸ்தும் உயரும்.

**குருவின் அதிசார காலமும், வக்ர காலமும்!**

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு விருச்சிக இராசியில் அதிசாரம் பெறுகிறார். 7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை விருச்சிக இராசிக்குள் குரு-செவ்வாய் சேர்க்கை ஏற்படுகின்றது. இதனால் குரு-மங்கல யோகம் உருவாகின்றது. இக் காலத்தில் மிகவும் எச்சரிக்கை தேவை. 10ஆம் இடம் வலுப்பெறுவதால் தொழிலில் புதியவர்களை நம்பி எதையும் செய்யவேண்டாம். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிப்பர். கண்ணியம் மிக்க மனிதர்கள் கூட கடமையைச் செய்ய தாம




யும் முறையாக வழிபட்டால் தடைக் கற்கள் படிக்கற்களாக மாறும்.

**வளர்ச்சி தரும் வழிபாடு!**

பிரதோஷ காலத்தில் நந்தியெம்பெருமானை வழிபாடு செய்தால் நல்லது நடக்கும். 'சிவாயநம' என்று தினமும் 27 முறை எழுதி வருவதோடு சிவனையும், உமாதேவியையும் திங்கள் தோறும் வழிபட்டு வாருங்கள் வளர்ச்சி கூடும்.

**செவ்வாய் பெயர்ச்சியும், உச்சமும்!**

உங்கள் இராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஜனவரி 20ஆம் திகதி முதல் மார்ச் 10ஆம் திகதி வரை தனது சொந்த வீடான விருச்சிகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். தக்க விதத்தில் தனவரவு கிடைக்கும். உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் உங்களுக்கு ஈடுபாடு அதிகரிக்கும்.

ஏப்ரல் 30ஆம் திகதி முதல் ஒக்டோபர் 26ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். தனாதிபதி லாப ஸ்தானத்தில் உச்சம்பெறும் இந்தநேரம் பொன்னான

# விருச்சிகம் தேடிக் குரு வந்தால் விருப்பம் அனைத்தும் நிறைவேறும்!

எழுபத்தைந்து சதவிகிதம் நற்பலன்களும், இருபத்தைந்து சதவிகிதம் கோசார அடிப்படையில் வரும் பலன்களும் இணைந்து செயற்படும். அதேநேரத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் மூன்று விதமான யோகத்தை வருடத் தொடக்கத்தில் வழங்குகிறார்.

குரு-சந்திர யோகம், குரு-மங்கல யோகம், குரு-சுக்ர பரிவர்த்தனையோடு புத்தாண்டு பிறக்கிறது. மேலும் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான குரு அஷ்டமத்தில் மறையும் பொழுது யோகத்தை வழங்கும் என்பது நியதி. அது இருக்கும் இடம் சரியானதாக அமையாவிட்டாலும் அது பார்க்கும் இடம் பலம்பெறும் இடமல்லவா? அந்த அடிப்படையில் குருவால், உங்களுக்கு நன்மைகள் கிடைக்க அதற்குரிய வழிபாடுகளை ஆண்டின் தொடக்கத்திலேயே செய்வது நல்லது.

பஞ்சம ஸ்தானத்தில் ராகுவும், 11ஆம் இடத்தில் கேதுவும் இருக்கிறது. லாப ஸ்தானத்தில் உள்ள கேதுவின் ஆதிக்கத்தால் விட்டு விட்டு இலாபம் வரும். ஒரு தொகை செலவான பின்பே மறுதொகை வந்து சேரும். வீண் விரயங்கள் ஏற்படாமல் சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது முதல், கட்டடம் கட்டும் புது முயற்சி வரை சேமித்த தொகையைச் செலவழிக்கலாம். குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொடுத்து அவர்களின் மனக் குறையை அகற்றலாம்.

அஷ்டமத்து குரு, ஒக்டோபர் மாதத்தில் தான் மாறுகிறது. அதுவரை மற்ற கிரகங்களின் ஆதிக்கம் நன்மை தரும் விதத்தில் அமைந்தால் அவை உங்கள் உயர்விற்கு கைகொடுக்கும். உங்களுக்கென்ற சுய ஜாதகம் இருக்கும். அதிலுள்ள திசாபுத்திகளின் பலமறிந்து புத்தாண்டின் கிரக நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து ஆண்டு

வதாகக் கூறுவர். நகை நட்டுகளை வாங்கிக் கொடுக்க முன்வருவீர்கள். வீடுமாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம், இலாகா மாற்றம் போன்றவை உங்கள் விருப்பம் போல் நிறைவேறும்.

10ஆம் இடத்தில் சனி சஞ்சரிப்பது யோகம்தான். அதன் பார்வை 4,7,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அலைச்சலைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொள்வது நல்லது. ஆதாயம் தரும் தகவலில் அக்கறை காட்டுங்கள். ஆரோக்கியத் தொல்லை ஏற்படுவதைத் தவிர்க்க ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. மண வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வரன்கள் வாசல் தேடி வந்து விட்டுப்போனாலும் இனிவரும் வரன்கள் இனிய வரன்களாக அமையும். கரும ஸ்தானம் வலுவடைவதால் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க சனிக்கிழமைதோறும் சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

ஆண்டின் தொடக்கத்தில் 8இல் சஞ்சரித்து வந்த குரு பகவான், ஒக்டோபர் 4ஆம் திகதிக்கு மேல் 9ஆம் இடத்திற்குச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு 1,3,5 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். உங்கள் இராசியை இராசிநாதன் குரு பார்ப்பதால் இக் காலம் ஒரு பொற்காலமாக அமையும். தொட்டது துலங்கும். உற்சாகத்தோடும் உத்வேகத்தோடும் பணிபுரிவீர்கள். பணக்கவலை தீரும். மனக் குமுறல் அகலும். எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

குருவின் பார்வை 3,5 ஆகிய இடங்களில் பதிவதால், சகோதர வர்க்கத்தினரைச் சார்ந்து இருப்பவர்கள் தனித்து இயங்க முற்படுவர். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். புதிய பாதை புலப்படும். வாகன வசதி பெருகும். பதவிகள் உங்களைத் தேடி வரும். சமூகத்தில் உங்கள்

தம் ஏற்படுத்துவர்.

மண வாழ்வில் மனக்கசப்புகள் வரலாம். பொருளாதாரத்தில் ஏற்ற இறக்க நிலைகள் உருவாகும். இராசிநாதனாகவும், தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் குரு வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது பங்குதாரர்கள் பக்கபலமாக இருக்க மாட்டார்கள். எதிர்பார்த்த இலாபம் ஏட்டில் இருக்குமே தவிர, கைகளுக்குள் வராது. மனக் கவலை அதிகரிக்கும் இந்த நேரத்தில் மாசாணியம்மன், பிரத்தியங்கரா தேவி, வாராஹி போன்ற தெய்வங்களை வழிபடுவது நல்லது.

**சனியின் வக்ர காலம்!**

ஏப்ரல் 25ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 20ஆம் திகதி வரை மூலநட்சத்திரக் காலில் தனுசு இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். இக்காலத்தில் நன்மையும், தீமையும் கலந்தே நடக்கும். வரவும், செலவும் சமமாகும். விரயாதிபதியாகவும், லாபாதிபதியாகவும் சனி விளங்குகிறார். அந்த அடிப்படையில் விரயாதிபதி வக்ரம் பெற்றிருப்பது நன்மைதான். வீண் விரயங்கள் அகலும். வீடுமாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம், வாகன மாற்றம் என தசாபுத்திக்கு ஏற்றவிதத்தில் மாற்றங்களை கொடுக்கும். குறிப்பாக ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் நீண்ட தூரப் பயணங்களையும் கொடுக்கலாம்.

அதே நேரத்தில் லாப ஸ்தானாதிபதியாகவும் சனி விளங்குவதால், பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் சேமிக்க இயலாது. முந்தைய சேமிப்புகள் கரையக்கூடும். பிறருக்குப் பணப்பொறுப்புகள் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேர்வதில் இழுபறி நிலை ஏற்படலாம். இதனால் உறவினர் பகை உருவாகும். பொதுவாகவே இது போன்ற வக்ர காலங்களில் நிதானத்தோடு செயற்பட்டால் தான் நிம்மதி கிடைக்கும். மேலும் சனி-செவ்வாய் சேர்க்கை காலத்தில் அதிக விழிப்புணர்ச்சி தேவை. இக்காலத்தில் அங்காரகனையும், சனீஸ்வரனை

நேரமாகும். அடுக்கடுக்காக ஆதாயம் வந்து கொண்டேயிருக்கும். அரசியல்வாதிகள் நண்பர்களாகி உங்களுக்கு ஆதரவு கொடுப்பர். வரவும், செலவும் திருப்தி தரும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். கௌரவம், அந்தஸ்து உயரும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். தொழிலை விரிவு செய்து தொகை வரவைப் பெருக்கிக் கொள்ளும் நேரம் இது. அசையாச் சொத்துக்களும் வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களையும் தொழில் பங்குதாரர்களாக்கிக் கொள்வீர்கள்.

**பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!**

வருடத் தொடக்கத்தில் அஷ்டமத்துக் குருவின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. இதனால் விரயங்கள் அதிகரிக்கும். அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. அப்பொழுதுதான் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். கணவன்-மனைவிக்குள் பிணக்குகள் ஏற்படாமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். உத்தியோகத்தில் எதிர்பாராத ஊர் மாற்றங்கள் வந்து சேரலாம். குருப்பெயர்ச்சிக்குப் பிறகே நன்மைகளை அதிகம் எதிர்பார்க்க முடியும். ஒக்டோபர் மாதத்திற்கு மேல் ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். அதிக விரயங்கள் குறையும். புதிய வாகனங்கள் வங்குவது முதல் பொன், பொருள் சேர்க்கை வரை வருடக் கடைசியில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பொதுவாக இந்த ஆண்டு வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள வேண்டிய ஆண்டாகக் கருதலாம். வியாழன் தோறும் குரு கவசம் பாடி குருவை வழிபடுவது நல்லது.

(முற்றும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நண்பன் நெதன்யாவுடன் இணைந்து புதுமையான இந்தியாவை உருவாக்குவேன்

### பிரதமர் மோடி தெரிவிப்பு




(டில்லி)

புதுமையான இந்தியாவை உருவாக்க நானும் என்னுடைய நண்பன் பெஞ்சமின் நெதன்யாகுவும் இணைந்து செயலாற்றுவோம் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுடன் குஜராத்திற்கான விஜயத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொண்டிருந்த பிரதமர் மோடி, அங்கு இயற்கை வேளாண்மை விவசாயப்பண்ணையில் "ஐகிரியேட்" எனப்படும் சர்வதேச தொழில்நுட்ப மையத்தை ஆரம்பித்து வைத்த பின்னர், மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் இஸ்ரேலுக்கு சென்றிருந்த போது இந்த இயற்கை வேளாண்மை அமைப்பின் 'ஐகிரியேட்' திட்டத்தை உருவாக்குவதற்கு இஸ்ரேலின் ஆதரவைக் கோரியிருந்தேன். அதற்கு சம்மதித்த நெதன்யாகு இந்தியா வருவதற்கு காத்திருந்தார்.

தற்போது எமது பாரதத்திற்கு வந்துள்ள அவர் இந்த திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளார். தொடர்ந்தும் ஒட்டு மொத்த அமைப்புக்களையும் புதுமையாக்க நாங்கள் உழைப்போம் எனத் தெரிவித்தார்.

இதேபோன்று அம்மக்கள் மத்தியில் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர், சிமாட் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றி அறிந்த உலகம் இனி "ஐகிரியேட" பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

இஸ்ரேல் மற்றும் இந்தியா இணைந்து ஏராளம் புதிய திட்டங்களை உருவாக்கி வளர்ச்சி காணும் எனக் கூறிய அவர், தனது உரையின் இறுதியில் 'ஜெய் ஹிந்தி', 'ஜெய் பாரத்', 'ஜெய் இஸ்ரேல்', நன்றி பிரதமர் மோடி அவர்களே" எனக் கூறி உரையை நிறைவு செய்தார். (இ-8)

## ஹவுதி கிளர்ச்சிக்குழு வீசிய ஏ சுட்டு வீழ்த்தப்பட்டதாக சவுதி

(ஜெட்டா)

ஏமனில் அரசுப்படைகளுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள ஹவுதி குழுவினர் வீசிய ஏவுகணையை இடைமறித்து அழித்து விட்டதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

ஏமனில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில், அரசுப் படைகளுக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும், ஹவுதி கிளர்ச்சியாளர் குழுவுக்கு ஆதரவாக ஈரானும் செயற்பட்டுவருகின்றன.

சவுதியை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பல முறை ஏவுகணைகளை ஏவியுள்ளனர். ஆனால், அதனை சவுதி இடைமறித்து அழித்துள்ளது.

இந்நிலையில், சவுதி அரேபியாவின் தெற்கு ஜிசான் பிராந்தியத்தை நோக்கி ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குழுவினரால் ஏவப்பட்ட ஏவுகணை சவுதி படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதனை சவுதி அரசு தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

ஏவுகணைகள் மற்றும் நிபுணத்துவங்களை ஹவுதி குழுவினருக்கு ஈரான் வழங்குவதாக சவுதி அரேபியா குற்றம் சாட்டுகிறது. ஆனால், ஈரான் இதனை மறுத்துள்ளது. (இ-8)



## பேருந்து தீப் 52 பேர் உடல்



(அஸ்தானா)

மத்திய ஆசிய கண்டத்திலுள்ள கஜகஸ்தான் நாட்டிலுள்ள அக்டோபே மாகாணத்துக்குட்பட்ட நெடுஞ்சாலை வழியாக நேற்று சென்று கொண்டிருந்த பேருந்தில் திடீரென தீ பிடித்ததில் 52 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

57 பேருடன் சென்று கொண்டிருந்த பேருந்து (உள்ளூர் நேரப்படி) முற்பகல் 10.30 மணியளவில் திடீரென்று தீப் பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் 52 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

படுகாயமடைந்த 5 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என கஜகஸ்தான் ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-8)

## ஜெயலலிதா மரணம்

# தினகரன், திவாகரனை கைது செய்யவேண்டும்

### அமைச்சர் ஜெயக்குமார் அதிரடி




(சென்னை)

ஜெயலலிதா மர்ம மரண விவகாரத்தில் தன்னிச்சையாக செயற்படும் தினகரன், திவாகரனை கைது செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

ஒகி புயலில் சிக்கி காணாமல்போன குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 18 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், விளவங்கோடு வட்டத்துக்கு உட்பட்ட நீரோடியைச் சேர்ந்த 33 பேர் மார்த்தாண்டன்துறையைச் சேர்ந்த 4 பேர், வள்ளவிளையைச் சேர்ந்த 35 பேர், இரவிபுத்தன் துறையைச் சேர்ந்த 4 பேர், சின்னத்துறையைச் சேர்ந்த 34 பேர், தூத்தூரைச் சேர்ந்த 9 பேர், பூத்துறையைச் சேர்ந்த 16 பேர், இரயுமன்துறையைச் சேர்ந்த 2 பேர், நித்திரவிளையைச் சேர்ந்த 2 பேர், முள்ளூர் துறையைச் சேர்ந்த 2 பேர், மேல்மிடாலம் பகுதியைச் சேர்ந்த 3 பேர் என விளவங்கோடு வட்டத்தைச் சேர்ந்த 144 மீனவர்களும், கல்குளம் வட்டம் வாணியகுடியைச் சேர்ந்த ஒருவர், குளச்சலை சேர்ந்த இருவர், தோவாளை வட்டம் பூதப்பாண்டி, மேல மணக்குடி பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவர் என மொத்தம் 149 மீனவர்கள் மாயமாகியுள்ளனர்.

இந்நிலையில், சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெயக்குமார் பேசுகையில், ஒகி புயலால் காணாமல் போன 194 மீனவர்கள் தொடர்பாக அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்படும்.

ஒகி புயலால் காணாமல் போன மீனவர்களின் எண்ணிக்கை 194. உயிரிழந்தோர் எண்ணிக்கை 25. ஜனவரி முதல் வாரத்தில் மாலத்தீவு பகுதியில் தேடினோம்.

காணமால் போனவர்கள் 15 நாட்களுக்குள் கரை திரும்பாவிட்டால் இறந்ததாக அறிவிக்கப்படும் எனக் கூறினார்.

மேலும் ஜெயலலிதா மரண விவகாரத்தில் யாராக இருந்தாலும் விசாரணை ஆணையத்தில்தான் தகவல்களை தெரிவிக்க வேண்டும். ஜெயலலிதாவை வைத்து அரசியல் செய்யும் தினகரன், திவாகரன் போன்றோர் தன்னிச்சையாக செயற்படுகின்றனர்.

அவர்களை உடனடியாக விசாரணை ஆணையம் கைது செய்து தீவிர விசாரணை நடத்தினால் உண்மைகள் வெளிவரலாம் என்றார்.

யார் எதை நோக்கி பயணித்தாலும், எங்களின் பயணம் மக்களை நோக்கியே உள்ளது என ஜெயக்குமார தெரிவித்தார். (இ-8)

## ரோமானியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை பெறுகிறார் வியோரிகா தான்சிலா



(புச்சாரெஸ்ட்)

ரோமானியா பிரதமர் மிஹாய் டுதோஸ் திடீர் இராஜினாமா செய்துள்ள நிலையில், புதிய பிரதமராக வியோரிகா தான்சிலா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடான ரோமானியாவில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் பிரதமராக இருந்த மிஹாய் டுதோஸ் திடீரென தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

சமூக ஜனநாயக கட்சியின் நீண்டகால உறுப்பினராக உள்ள டுதோஸ் மீது கட்சி அதிருப்தியில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, ஆளும் கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பு நடத்தி டுதோஸ்க்கு அளித்த ஆதரவை திரும்பப் பெறுவதாக அறிவித்ததால் அவர் இராஜினாமா செய்தார்.

துணை ஜனாதிபதி பால் ஸ்டானெஸ்கு தற்காலிக பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய பிரதமராக வியோரிகா தான்சிலா தேர்வு செய்யப்பட்டுள்ளார். ரோமானியாவின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெறவுள்ள தான்சிலா ஐரோப்பிய யூனியனில் உறுப்பினராக உள்ளார்.

ஆளும் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவர் லிவியூத்ராக்னே, தான்சிலாவை முன்மொழிந்துள்ளார். புதிய பிரதமரின் நியமனம் விரைவில் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் பெப்ரவரி மாதத்தில் புதிய அமைச்சரவை பதவி யேற்க வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ன ஏவுகணை ...தி அறிவிப்பு



## ஐரோ.ஒன்றிய உறவைத் துண்டிக்கும் மசோதா பிரிட்டன் பாராளுமன்ற கீழவையில் நிறைவேற்றம்

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளை துண்டித்துக்கொள்ள வகை செய்யும் சட்ட மசோதா பிரிட்டன் பாராளுமன்ற கீழவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலக பிரிட்டன் பாராளுமன்றம் எடுத்த முடிவு தொடர்பாக கடந்த 2016ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில், பிரிட்டனில் இருந்து விலகும் தீர்மானத்தை ஆதரித்து அதிகம் பேர் வாக்களித்தனர். இதையடுத்து வரும் 29.3.2019 இற்குள் ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிந்து செல்வதற்கான ஆயத்தப் பணிகளில் பிரிட்டன் பிரதமர் தெரசா மே மும்முரம் காட்டி வருகிறார்.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளைத் துண்டித்துக்கொள்வது தொடர்பாக பிரிட்டன் பாராளுமன்ற கீழவையில் ஒரு மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதா மீதான விவாதத்திற்குப் பிறகு நேற்று



வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 650 உறுப்பினர்கள் கொண்ட இந்த சபையில், மசோதாவை ஆதரித்து 324 உறுப்பினர்கள் வாக்களித்ததால் மசோதா நிறைவேறியது. பிரெக்சிட் விவகாரத்தில் இந்த மசோதா முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது:

இனி இந்த மசோதா பாராளுமன்ற மேல்சபையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

மேல் சபையில் இந்த மசோதா மீதான விவாதத்தின்போது பல்வேறு விவகாரங்கள் பற்றி பேசப்படும்.

ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறும் முடிவை பிரிட்டன் திரும்பப்பெற வேண்டும் என ஐரோப்பிய கவுன்சில் தலைவர் டொனால்ட் டஸ்க் கோரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-8)

## ...ப்பிடித்ததில் ...ல் கருகிப் பலி!



## இந்தியாவுடன் போர் கிடையாது பாகிஸ்தான் பிரதமர் சூசகம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஒருபோதும் வலியப்போய் தாக்குதல்கள் நடத்தாது எனவும் எப்போதுமே பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் ஷாகித் அப்பாசி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பாகிஸ்தான் தொடர்ந்து எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்து, முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்துவதற்கு பக்கபலமாக இருந்து வருகிறது. எல்லையில் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அத்து மீறிய தாக்குதல்களில் ஈடுபட்டும் வருகிறது. இதன் காரணமாக இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. எல்லையில் தொடர்ந்து பதற்றமான சூழல் உள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் பிரதமர் ஷாகித் அப்பாசி, அங்குள்ள தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவரிடம், இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத், அரசு உத்தரவிட்டால் எல்லை தாண்டிச் சென்று எந்த ஒரு தாக்குதலையும் நடத்தத் தயார் எனக் கூறி இருப்பது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது அவர் இந்தியாவுடன் பாகிஸ்தான் போர் புரிவதற்கான வாய்ப்பை சூசகமாக நிராகரித்தார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது, பாகிஸ்தான் ஒருபோதும் வலியப்போய் தாக்குதல்கள் நடத்தாது. எப்போதுமே பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளது. ஆனால் காஷ்மீர் பிரச்சினையில் சமரசம் செய்து கொள்ளாமல், மரியாதையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை அமைய வேண்டும் என்று தெரிவித்தார். மேலும் இந்தியாவுக்கு பல நோக்கங்கள் இருக்கலாம்.

ஆனால் எல்லை கட்டுப்பாட்டுக்கோடு நிலவரத்தை உணர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தானிலுள்ள 30 இலட்சம் ஆப்கானிஸ்தான் அகதிகள் நாடு திரும்புவதற்கு உலக நாடுகள் உதவவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

5 ஆண்டு கால சிறப்பான ஆட்சி செயற்பாடுகள், முன்னெப்போதும் இல்லாத வகையில் அமைந்த வளர்ச்சிப்பணிகள் அடிப்படையில் அடுத்த ஆண்டு பொதுத்தேர்தலைச் சந்திப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

## அப்துல் கலாம் வீட்டிலிருந்து அரசியல் பயணத்தை தொடங்கும் கமல்ஹாசன்

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் அப்துல் கலாம் வீட்டில் இருந்து நடிகர் கமல்ஹாசன் எதிர்வரும் 21 ஆம் திகதி அரசியல் பயணத்தினை ஆரம்பிக்கிறார்.

நடிகர் கமல்ஹாசன் கடந்த 16 ஆம் திகதி நள்ளிரவில் தனது அரசியல் பயணத்தினை பெப்ரவரி 21 ஆம் திகதி தொடங்குகிறேன் என அறிவிப்பு வெளியிட்டார். அவர் பிறந்த இராமநாதபுரத்தில் கட்சியின் பெயரை அறிவிக்கவுள்ளார்.

ஆரம்பகட்ட சுற்றுப்பயணத்தில் மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை மாவட்ட மக்களை சந்திக்க திட்டமிட்டுள்ளார் என தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இராமேஸ்வரத்தில் அப்துல் கலாம் வீட்டில் இருந்து நடிகர் கமல்ஹாசன் 21 ஆம் திகதி அரசியல் பயணத்தினை தொடங்க





திட்டமிட்டுள்ளார்.

இதுபற்றி அவர் தெரிவித்துள்ள விளக்கத்தில், கலாமிற்கு பல கனவுகள் இருந்தன. அவரைப் போல பல கனவுகள் கொண்டவன் நான். விமர்சிப்பது மட்டும் என் வேலையன்று.

நான் இறங்கி வேலை செய்ய வந்தவன் என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர், திராவிடம் என்பது தமிழ்நாடு தழுவியது மட்டுமல்ல. அது நாடு தழுவியது. மிகப்பெரிய சரித்திரமும்,

ஆந்த்ரோபால ஜியும் தொல்பொருள் ஆராய்ச்சியும் திராவிடத்தில் உள்ளது என றும் தெரிவித்துள்ளார். (இ-8)

## நைஜீரியாவில் போகோஹறாம் தற்கொலைப்படையினரின் தாக்குதலில் 12 பேர் பலி!

(நைஜர்)

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் இயங்கி வரும் போகோஹறாம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 12 பேர் உடல் சிதறி பலியாகினர்.



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகள் குழு இயங்கி வருகின்றது. நைஜீரியா மட்டுமல்லாது அண்டை நாடுகளிலும் இந்தக்குழு பல்வேறு தாக்குதல்களை நடத்தயுள்ளது. இந்நிலையில், நைஜீரியாவின் தென்கிழக்கு பகுதியிலுள்ள மைடுகுரி பகுதியிலுள்ள சந்தையில் நேற்று முன்தினம் இரண்டு தீவிரவாதிகள் தங்களது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தனர்.

இந்தக் கோர தாக்குதலில் 12 பேர் உடல் சிதறி பலியாகியுள்ளனர். 48 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் பாடசாலை மாணவிகள் கடத்தப்பட்ட வீடியோவை இந்த இயக்கம் நேற்று முன்தினம் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 225 உறுப்பினர்களையும் மீண்டும் பாடசாலைக்கு அனுப்புங்கள்!

## சபாநாயகரிடம் அமைச்சர் மனோ கோரிக்கை

(கொழும்பு)


சபாநாயகருக்கு நான் ஒரு யோசனை சொல்கின்றேன். எமது நாட்டின் பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களையும் பாடசாலைகளுக்கு அனுப்புங்கள். மீண்டும் பாடசாலைக்கு சென்றாவது அவர்கள் ஒழுக்கத்தை கற்றுக்கொள்ள முயற்சிக்கட்டும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு - டட்லி சேனாநாயக்க வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சகோதரத்துவ தைப் பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது நாட்டின் பாராளுமன்றத்தில் கடந்த வாரம் அமைச்சர்களுக்கிடையிலும் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலும் மல்யுத்தம் இடம்பெற்றது. இவர்கள் பாடசாலை மாணவர்களைப் போல் பாராளுமன்றத்தில் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

அது மாத்திரமல்ல. அமைச்சரவையில் ஜனாதிபதி மனம் வருந்தும்படியான சம்பவங்கள் நடை பெற்றுள்ளன. இவ்வாறான சம்பவங்களை நினைத்து நான் வெட்கப்படுகின்றேன்.

சக வாழ்வு என்பது இனம், மதம் மற்றும் மொழி ஆகியவற்றுக்குள் மாத்திரம் கட்டுப்பட்டதாக இருக்கக் கூடாது. இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து அரசியலிலும் சக வாழ்வு என்பது அத்தியாவசியமானதாகும். நாட்டின் பிரஜைகள் மாத்திரமன்றி ஜனாதிபதி முதற்கொண்டு பிரதமர் வரை அனைவரும் சகவாழ்வை பின்பற்ற வேண்டும்.





சாதாரண மக்களிடத்தில் இப்பிரச்சினை இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் தற்போது சகோதர மொழிப் பாடசாலை ஒன்றில் தைப் பொங்கல் தினத்தை மாணவர்கள் ஒற்றுமையுடன் கொண்டாடுகின்றனர்.

இவர்களைப் பார்த்து அமைச்சர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நான் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுகின்றேன். தயவு செய்து பாடசாலை மாணவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பாதீர்கள். மாணவர்களின் ஒழுக்கத்திற்கு அது பாதுகாப்பல்ல.

இலங்கையின் கடந்த கால அரசியல் தலைவர்களின் கருத்தின்படி எமது நாட்டை வெகு விரைவில் இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து அனைத்து பிரஜைகளையும் உள்ளடக்கிய இலங்கையர் என்ற இனத்தின் கீழ் ஒன்றிணைக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 2 வர்த்தக நிலையங்கள் தீக்கிரை





(கொழும்பு)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மெராயா நகரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் இரண்டு வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை 3.15 மணியளவில் குறித்த தீ அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது, உயிராபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை எனவும், வர்த்தக நிலையங்களிலுள்ள பொருட்கள் அனைத்தும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதேச மக்கள், பொலிஸார், நுவரெலியா மாநகர சபையின் தீ அணைப்புப் பிரிவினர் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும், தீப்பரவல் இடம்பெற்றதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குறித்த சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# தீ சுடுமென்று அன்றே சொன்னோம்

## ஆறுமுகன் தொண்டமான் சுட்டிக்காட்டு



(ஹற்றன்)

"மாற்றம் வேண்டும் என்று எண்ணி செய்த தவறு தான் இன்று பாரிய அசௌகரியங்களுக்கு முகங் கொடுக்க வைத்துள்ளது. அன்று செய்த தவறை இனி செய்யாமல் சிந்திக்க வேண்டும். மீண்டும் அந்தத் தவறை செய்தால் 5 வருடத்திற்கு தலைத்தூக்க முடியாது" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் எம்.பி. தெரிவித்தார்.

மஸ்கெலியா பிறவுண்ஸ்வீக் தோட்டத்தில் புளூம்பீல்ட் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "75 வருட காலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மக்களுக்கு தேவையானவற்றை தேவையான நேரத்தில் செய்து கொடுத்தது.

தீ சுடும் என்று இ.தொ.கா.கூறியும் சுட்டாலும் பரவாயில்லை என்று நெருப்பைத் தொட்டு இன்று பல பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

நான் அமைச்சராக இருந்த நேரத்தில் உரிய முறையில் வீடுகளை அமைத்துக் கொடுத்தேன். ஆனால் தற்போது முறையற்ற ரீதியில் வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

நமது முன்னோர்கள் உருவாக்கிய தேயிலை மலைகளை நமக்குப் பிரித்துக் கொடுத்தால் என்ன? எம்மால் பராமரிக்க முடியும். தேயிலை காணிகள் பிரிக்கப்படுகின்றன.

நமது மரக்கறித் தோட்டங்கள் தோட்ட அதிகாரிகளால் அபகரிக்கப்படுகின்றன. இதனை மாற்றியமைக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### புகழ்ச்சிக்கு மயங்குபவர்கள்!

அழகாகப் பாராட்டித் தான் ஒருத்தியின் அன்பைப் பெறுகிறான் ஒருவன்.

பிள்ளையைப் பாராட்டித்தான் அதைப் படிக்க வைக்க முடிகிறது அப்பா, அம்மாவால்.

அம்மாவைப் பாராட்டித்தான் தன் சிறு சிறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார் அப்பா.

நிறுவனத்தைப் பாராட்டித்தான் கல்வி நிறுவனத்தில் இடம் வாங்குகிறார்கள் பெற்றோர்கள். வீட்டுக்காரரைப் பாராட்டித்தான் வாடகை தருவதைத் தள்ளிப் போடுகிறார் குடும்பத்தலைவர். நண்பனைப் பாராட்டித்தான் கடனை வாங்க வேண்டியிருக்கிறது..

பாராட்டு என்பது ஒரு மாய வலை. அதில் சிக்காதவர்கள் என்று விதிவிலக்காக ஒருவர்கூட இருக்க முடியாது. முற்றும் துறந்த முனிவர் உட்பட.

"இவருக்குப் பாராட்டினால் கட்டோடு பிடிக்காது'' என்று ஒருவரையும் உதாரணம் காட்ட முடியாது. அப்படி யாராவது கிடைத்தால் "இது ஓர் அபூர்வமான பண்பு சேர்!'' என்று அவரைப் பாராட்டுங்கள். அவ்வளவுதான்! அந்த மனிதர் 'தடால்' என்று விழுந்துவிடுவார்.

ஒரு மனிதனுக்குப் பாராட்டுத் தேவைதான். அது அளவான 'டோஸ்' வரை கிடைத்தால் போதுமானது. அளவுக்கு மீறுகிற போதும் தகுதியற்ற பாராட்டை நாம் எதிர்பார்க்கிறபோதும் நமக்கே அது வினையாகிவிடுகிறது.

ஒன்றுமட்டும் உறுதி. நம்மைப் பாராட்டுகிறவர்கள் 100 இற்கு 90 பேர் காரியவாதிகளே. எனவே கவனம் தேவை.

விளக்கொளிக்கு ஆசைப்படுகிற விட்டில் பூச்சி அதிலேயே உயிரை விடுவதைப் போல், கவர்ச்சி மிகுந்த இந்தப் பாராட்டு நம்மைக் கவிழ்த்து விடவும் செய்கிறது.

பாராட்டு என்பது விண்ணப்ப மனு. இவற்றை வாங்கிப் போடப் போடப் பலருக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாகி விடுகிறோம்.

இத்தனை காலமாய்ப் பாராட்டை ஒரு தூண்டுதல் கண்ணோட்டத்திலும் உற்சாகம் தரும் விடயமுமாகவே சிந்தித்துப் பார்த்திருக்கிறோம். இது ஒரு மகாப் பலவீனம் என்று எண்ணிப் பாாத்தது இல்லை. இனி நம் கண்ணோட்டம் மாறட்டும். கவனம் சேரட்டும்.

பலிக்கடா, வெட்டப்படுவதற்கு முன்பு, குளிப்பாட்டப்படுகிறது. மஞ்சள் பூசப்படுகிறது. குங்குமம் தடவப்படுகிறது. மாலையிடப்படுகிறது. கடா நினைக்கிறது; 'ஆகா! நமக்குத்தான் இந்த மனிதர்கள் எப்படிப் பட்ட சிறப்பைச் செய்கிறார்கள்' என்று.

இத்தகைய பேதமைதான், பாராட்டைக் கேட்டு நாம் உருகிப்போவதும்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

# அமரர் இ.ச.பேரம்பலம்

## ESP நிறுவன ஸ்தாபகர் (வாரிவளவு, காரைநகர்)



அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்னமுதாய் இனிய அறிவுரைகள் கூறி
ஈடேற வணிகத்தில் வழிகள் பல காட்டி
உன்னதமான வாழ்வை எமக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்
எண்ணரிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர்! எம்மையெல்லாம்
ஐயுறவு ஏதுமின்றி எம் வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதற்கரிய பாடல் கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருளுரையும் இனிதேதந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி சமைத்த
தெய்வமே எங்கள் அன்புத் தந்தையே!
எம்மைவிட்டு விண்ணுலகு சென்று
ஆண்டுகள் இருபத்தைந்து அகன்றிட்ட போதும்
மறக்குமா எம் நெஞ்சம்! என்றென்றும்
உம் நினைவில் வாழும்

தோற்றம் : 26.04.1926
மறைவு : 19.01.1993

(C-1262)


**- குடும்பத்தினர்**

மணி ஓசை
383 கோயில் வீதி,
நல்லூர்.

ESP நாகரத்தினம் சக நிறுவனம்
54 கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆம் திகதிக்கு பின்னர் தான் ஐ.தே.க.தேர்தல் விஞ்ஞாபனம்



(கொழும்பு)


தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறுவதால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு பின்னரே தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியில் இம்முறை போட்டியிட வாய்ப்பு கிடைக்காதவர்களை நாம் கைவிடமாட்டோம். அவர்களுக்கு எதிர்காலத்தில் உரிய இடத்தை வழங்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானது முதல் கிராம மட்டத்திலான கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை நாம் உரிய முறையில் முன்னெடுத்தோம். இதனால் கிராமத்திற்கு தகுதியானவர்களை நாம் களத்தில் இறக்கியுள்ளோம். எனினும் எமக்கு அதிகமான விண்ணப்பங்கள் கிடைத்தமையினால் பலரை வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு முடியாமல் போனது. ஏனெனில் ஒரு வட்டாரத்தில் ஒருவரை மாத்திரமே எம்மால் களமிறக்க முடியும்.

எனினும் இம்முறை போட்டியிட முடியாதவர்களை நாம் கைவிட மாட்டோம். அவர்களுக்கு உரிய இடத்தை நாம் வழங்குவோம்.

மேலும் தேர்தல் விஞ்ஞாபன நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெறுவதால் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு பின்னரே தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)




# யாழில் 15 நாட்களுக்குள் 191 பேருக்கு டெங்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இந்த மாதம் 15 நாட்களுக்குள் 191 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் டெங்கு நோய்த் தாக்கம் திடீரென அதிகரித்துள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்புடன் இருக்குமாறு சுகாதார பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

வடக்கில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து காணப்பட்ட போதிலும் யாழ்.மாவட்டத்திலேயே இம்முறை தீவிரமடைந்துள்ளது. கடந்த வருடம் 6 ஆயிரம் பேருக்கு அதிகமானவர்கள் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர். இது கடந்த வருடங்களை விடவும் அதிகமான தொகையாகவுள்ளது.

யாழ்.குடாநாட்டில் இந்த மாதம்கடந்த 15 ஆம்திகதி வரை 191 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக இனங் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் 5 உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களை விட யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய்த் தொற்று அதிகரித்து காணப்படுவதால் இந்த நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு விதமான செயற்றிட்டங்கள் சுகாதார துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசேடமாக நேற்று முன்தினமும் நேற்றும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கரவெட்டி, பருத்தித்துறை, தெல்லிப்பழை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த பகுதிகள் அனைத்திலும் உள்ள வீடுகளுக்கு 4 பேர் வீதம் சென்று டெங்கு கட்டுப்பாட்டு விழிப்புணர்வு செயற்றிட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் டெங்கு நோய்த் தாக்கம் சடுதியாக அதிகரித்துள்ள காரணத்தினால் பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் வீடுகள், பற்றைக்காணிகளை சுத்தம் செய்தும் பாதுகாப்புடன் இருக்குமாறும், இதன் மூலம் நுளம்பு பெருக்கத்தை ஓரளவு கட்டுப்பாட்டுக்கள் கொண்டுவர முடியும் எனவும் சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

# அஞ்சல் திணைக்கள சேவையாளர்களின் விடுமுறைகள் ரத்து

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு அஞ்சல் திணைக்கள சேவையாளர்களின் விடுமுறைகள் கடந்த செவ்வாய்க் கிழமை முதல் எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அஞ்சல் மா அதிபதி டீ.எல்.பி.ஆர். அபயரத்ன அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அஞ்சல் திணைக்களத்துக்கு பாரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலை உரிய முறையில் சட்ட ரீதியாக நடத்துவதற்காக அஞ்சல் திணைக்களம் பாரிய கடமையை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதன்படி தேர்தல் நடத்துதல், வாக்குகளை எண்ணுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக சேவையாளர்களை நியமிக்கும் கடிதங்களை தாமதமின்றி ஒப்படைத்தல் மற்றும் வாக்காளர் அட்டைகளை வீடு வீடாகச் சென்று ஒப்படைத்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி விடயங்களைக் கவனத்தில் கொண்டு அஞ்சல் திணைக்கள சேவையாளர்கள் விடுமுறை பெறாமல் இருக்குமாறு அஞ்சல் மா அதிபதி டீ.எல்.பி.ஆர். அபயரத்ன அறிவித்துள்ளார். (இ-7)

# யாழில் பணிபுரியும் பெண்பொலிஸ் உத்தியோகத்தருக்கு பொலிஸ் அதிகாரிகளின் நிதிப்பங்களிப்பில் வீடமைப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு பொலிஸ் அதிகாரிகளின் நிதிப் பங்களிப்பில் வீடமைத்து கொடுப்பதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று காங்கேசன்துறை பகுதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் குற்றத்தடயவியல் பிரிவில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்ப நிலையைக் கருத்தில் கொண்டு, வீடு ஒன்றை நிர்மாணித்து வழங்குவதற்கு வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதற்கமைய, யாழ்ப்பாணத்திலுள்ள 14 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளின் நிதிப்பங்களிப்புடன், பத்து இலட்சம்ரூபா பெறுமதியான வீடு ஒன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அந்த வகையில் காங்கேசன்துறை புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள குறித்த பெண் பொலிஸ் உத்தியோருக்கு சொந்தமான காணியில் புதிய வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டினார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ, யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள 14 பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் அத்தியட்சகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-9)

## காட்டிக்கொடுத்த முகநூல்

# நாடு கடத்தப்படும் இலங்கைப் பெண்

(ஷார்ஜா)

திருடியதாகச் சந்தேகிக்கப்படும் நெக்லஸை அணிந்தவாறு முகநூலில் புகைப்படத்தைப் பதிவேற்றிய இலங்கைப் பணிப்பெண்ணுக்கு ஷார்ஜா நீதிமன்றம் ஆறு மாத சிறைத் தண்டனையும் அதன் இறுதியில் நாடு கடத்துமாறும் உத்தரவிட்டது.

இந்த இலங்கைப் பெண் அரபு நாட்டில் வீடொன்றில் பணியாற்றி வந்தார். இந்த நிலையில், அந்த வீட்டின் உரிமையாளரின் மனைவிக்குச் சொந்தமான நெக்லஸ் திருட்டுப் போனது.

திருட்டுப்போன நெக்லஸை அணிந்தபடி, குறித்த இலங்கைப் பெண் தனது முகநூலில் புகைப்படம் ஒன்றைப் பதிவேற்றியிருந்தார்.

இதை தற்செயலாகக் கண்டு அதிர்ச்சியுற்ற வீட்டு உரிமையாளரின் மனைவி, அது குறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தார்.

பொலிஸ் விசாரணையின்போது, குறித்த பணிப் பெண் தாம் நெக்லஸைத் திருடவில்லை என்று கூறினாலும் அவரது வீட்டு குப்பைவாளியில் இருந்து நெக்லஸை பொலிஸார் கண்டெடுத்தனர்.

அதுபற்றி விசாரித்தபோது, அதைத் தமது உரிமையாளரின் மனைவி தனக்குப் பரிசாகத் தந்ததாகவும் அது தங்கமாக இருக்காது என்று நினைத்து குப்பைவாளியில் வீசியதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நடக்காதென்பார் நடந்துவிடும்'

## கம்பவாரிதி இ.ஜெயராஜ்



உங்களுக்கும் அலுத்துத்தான் போயிருக்கும். எதனால் என்று கேட்கிறீர்களா? உண்மை நோக்கியும் இன நன்மை நோக்கியும், நம் தலைவர்களை நான் விமர்சிக்க, விமர்சிக்க, தலைவர்கள் மீதான உங்களது ஆதரவையும் எதிர்ப்பையும் பொறுத்து, நீங்களும் 'டென்ஷ'னாகி, 'டென் ஷ'னாகிக் களைத்துப் போனதைத் தான் சொல்கிறேன்.

எனது நியாயபூர்வமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், சில (அப்)பிராணிகள் என்னை யும் கம்பனையும் திட்டித்திட்டி, தமது 'தினவு' அகற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

நான் தொட்டதால் கம்பனுக்கு வந்த வினை! தர்க்கபூர்வமாக சான்றுகளோடு நான் முன்வைக்கும் விமர்சனத்தை, எதுவித நியாய பூர்வமான பதில்களும் கூறாமல் மறுதளிக்கும், இவர்களை நினைக்கச் சிரிப்புத்தான் வருகிறது. மனிதர்களுக்கு மட்டுமே உரிய ஆறாவது அறிவான சிந்திக்கும் திறனை இழந்த இவர்களும் பாவம்தான்! எத்தனை நாட்களுக்குத்தான் இல்லா தவற்றைச் சொல்லி என்னைத் திட்டித்தீர்ப்பது.

அவர்களுக்கும் அலுத்துத்தான் போயிருக்கும். அதுமட்டுமா? கேட்பாரில்லாத, சிந்திப்பாரில்லாத திருந்துவாரில்லாத, இந்தச் சமுதாயத்தை எத் தனை நாட்களுக்குத்தான் இடித்துரைப்பது என்று, எனக்கேகூட அலுத்துத்தான் போய்விட்டது. தீர்க்கதரிசனமற்ற தலைவர்கள், சிந்தனையில்லா மக்கள், புத்திசாலிகளான எதிரிகள் என, எம் இனத்தைச் சூழ்ந்து கிடக்கும் ஆபத்துக்களைப் பார்க்க, என்னாகப் போகிறதோ எம்இனம்? என்று மனம்பதறுகிறது. அந்த வருத்தத்தோடும் சிந்தனையோடும்படுக்கையில்கிடந்தேன்.

'ட்றிங்' 'ட்றிங்' 'ட்றிங்'. திடீரென தொலைபேசி அழைத்தது. எதிர்முனையில்எனக்கு நெருக்கமான ஒரு ஊடக நண்பனின் குரல். 'ஜெயராஜ் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிடைத்துவிட்டது. மிகப் பெரிய மாற்றம் நிகழப்போகிறது.

உங்கள் கடிதத்தால் நம் தலைவர்கள், இன நன்மை நோக்கிச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இனித் தமிழர்களுக்கு நல்லகாலம் தான்' என்று பரபரத்தான்அவன். வழக்கமாக நிதானமாகப் பேசும் அவன் குரலில், புதிதாய்த் தெரிந்த பரபரப்பு ஆச்சரியப்படுத்த, 'என்ன சுந்தர்? (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ன நடந்தது?'என்றேன். 'என்ன நடந்ததா? பெரிய ஆச்சரியம் நடந்திருக் கிறது. நீங்கள் இன்னும் கேள்விப் படவில்லையா?' என்று, செய்தி சொல்லாமல் என்னையும் பதற்றப்படுத்தினான்.

'சரியப்பா விடயத்தைச் சொல்லாமல் இதென்ன பரபரப்பு' என்று சினந்தேன். அவன் நிதானமாகச் சிரித்தபடி தொடர்ந்தான். 'உண்மை அறிந்த உற்சாகத்தில் எதைச் சொல்வதென்று தெரியவில்லை,

நீங்கள் சொன்னாற்போல நம் தலைவர்களெல்லாம் ஒன்றுபட்டு, இனப்பிரச்சினை பற்றி பேரினத்தாரோடு பேச முடிவுசெய்து விட்டார்கள். எதிர்காலத்தை மனதில் கொண்டு இனி செயற்படுவதென்று,

மிக ஆச்சரியமாக அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்' என்றான்.

நானும் சற்று ஆச்சரியத்துடன், 'அதென்ன எதிர்காலத் திட்டம்?' என்றேன். அவன் விபரித்ததைக் கேட்க எனக்கு மயக்கமே வந்துவிடும் போல் இருந்தது.

'நான் காண்பது என்ன கனவா? அல்லது நனவா?' என்று, பழைய படமொன்றில் சிவாஜி கணேசன் ஒரு வசனம் பேசுவார். நண்பன் சொன்னதைக் கேட்டதும் அந்த வசனம் தான் ஞாபகத்திற்கு வந்தது. என் எழுத்திற்கு இவ்வளவு சக்தியா? என்று மனம் மமதைகொள்ள முயல, 'சீச்சீ' அது சத்தியத்திற்கான சக்தி என்று புத்தி சொல்லிற்று. அப்படி என்ன அவன் சொன்னான் என்று கேட்கிறீர்களா? அந்த அதிசயத்தை ஏன் கேட்கிறீர்கள் போங்கள்! கடவுளின் பார்வை தமிழினத்தின்மேல் விழத் தொடங்கிவிட்டது போலும், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவின் அழைப்பின் பேரில் நம் தமிழ்த் தலைவர்கள் அத்தனை பேரும் ஒன்றுகூடி நீண்டநேரம் கலந்துரையாடி, அற்புதமான சில முடிவுகளை எடுத்திருக்கிறார்களாம். அவர்கள் எடுத்த முடிவுகளை விபரமாய் நண்பன் சொன்னான். அவன் சொன்னவற்றை இங்கே எழுதுகிறேன். பொறுமையாகப் படியுங்கள்!




அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில்,

- தமிழரசுக்கட்சி.
- தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சி
- தமிழ் காங்கிரஸ் கட்சி
- தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்)
- தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ)
- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - சுரேஸ் அணி (ஈ.பி.ஆர்.எல்.எப்)
- ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - வரதராஜப் பெருமாள் அணி (ஈ.பி.ஆர். எல்.எப்)
- ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)
- ஜனநாயக போராளிகள் கட்சி

என்பவற்றின் தலைவர்கள் கலந்து கொண்டனராம்.

'என்னது? தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஆனந்தசங்கரியும், ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும், வரதராஜப் பெருமாளும் கூடவா அழைக்கப்பட்டனர்?' என்று,

ஆச்சரியத்துடன் நீங்கள் கேட்க நினைப்பது புரிகிறது.

'ஐயா பொதுமகனாரே! தயவு செய்து உங்கள் திருவாயைச் சற்று மூடுங்கள். என்னவோ ஏதோ! அவர்களும் தமிழ்மக்கள் பிரதிநிதிகளாய் அங்கீகரிக்கப்பட்டவர்கள்தானே.

குற்றம் என்று பார்த்தால் மேற் சொன்ன எல்லாரிடமும் ஏதோ ஒரு குற்றத்தைச் சொல்லலாம் தானே. 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்று நம் பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள். பிரிவுக்கான காரணம் தேடும் நேரமில்லை இது. உறவுக்கான காரணம் தேடும் நேரம். முதலில் எல்லோரும் ஒன்றுபடட்டும். தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றபின், மக்கள் மன்றில் அவரவர் தம்மை நிரூபித்துக் கொள்ளட்டும். ஒற்றுமையின் உன்னதத்தை அவர்களே விளங்க முற்படும் போது, பொதுமகனாராகிய நீர் தயவு செய்து அதைக் குழப்பாதேயும்'. 'சரி சரி மேற்கொண்டு விடயத்தைச் சொல்லும் என்கிறீர்களா?' இதோ உங்கள் உத்தரவுக்குப் பணிகிறேன்.

அன்றைய கூட்டத்தில் மேற்படி கட்சியினர் ஒன்றிணைந்து, ஏகமனதாக சில முடிவுகளை எடுத்துள்ளார்களாம். நண்பன் சொன்ன அவர்தம் முடிவுகளைக் கீழே செய்திகளாய்த் தருகிறேன். ஆச்சரியத்தில் நீங்கள் மயங்கி விழும் வாய்ப்புண்டு. எதற்கும் ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு தொடர்ந்து படியுங்கள்.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்பற்றி நண்பன் சொன்ன விடயங்களைச் சுருக்கித் தருகி றேன்.

முதலில் மேற்படி கட்சிகள் பத்தாண்டுகால அடிப்படையில் தமது கட்சிகளை கலைத்து விடுவதாய் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் கட்சிப் பிரிவுகள் இருக்குமாயின் எப்படியும் தத்தமது கட்சியின் வளர்ச்சி நோக்கியே தலைவர்கள் இயங்க முயற்சிப்பர். எனவேதான் இக் கூட்டமைப்பில் இணையும் கட்சிகள் தத்தமது சொந்தக்கட்சிகளை கலைத்துவிடுவது எனும் முடிவு எடுக்கப்பட்டதாம்.

அடுத்ததாய், இனி ஒருவரையொருவர் 'துரோகிகள்' என்று குற்றம் சாட்டுவதில்லை என தலைவர்கள் உறுதி பூண்டுள்ளனராம். முடிந்த வரலாற்றுப்பாதையில் எல்லாக் கட்சிகளிலும் அமைப்புக்களிலும் குற்றச்சாட்டுகள் பதிவாகி இருப்பது நிதர்சனமாகும். சந்தர்ப்பத்திற்கேற்ப தத்தம் குற்றங்களை மறைத்து மற்றவர்களது குற்றங்களை விரிவித்து சுயலாபம் காணும் எண்ணம் இருந்தால் கட்சிகளுக்கிடையிலான பகையுணர்வு நிலைத்தே நிற்கும். எனவேதான் மற்றவர் குற்றத்தில் தத்தமது தகுதியை நிரூபிக்க முடியாமல் [illegible] றுகளை மறந்து, மன்னித்து ஒற்றுமையாய் இருப்பதற்காயும் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

தத்தமது கட்சியின் வளர்ச்சி அடிப்படையிலன்றி இன வளர்ச்சி அடிப்படையில் ஒருமித்துச் செயற்படுவதாகவும், நேர்முகமாகவோ மறைமுகமாகவோ தத்தம் கட்சிக்கு வாய்ப்பாகச் செயற்பட முனைவதில்லை எனவும் தமது கட்சி ஆதரவாளர்களையும் தொண்டர்களையும் கூட கட்சி மனப்பான்மையிலிருந்து வெளிவரச் செய்து இனநலன் நோக்கி ஒருமித்து இயங்கச் செய்வது எனவும் தலைவர்கள் உறுதி பூண்டனர். கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட கூட்டமைப்புக்கள் பெயரளவில் கூட்டமைப்புக்களாய் இருந்தனவேயன்றி இனநலன் நோக்கிய ஒருமைப்பாட்டுணர்வோடு அவை இயங்கவில்லை. அந்த ஆபத்து தொடராமல் இருக்கவே தலைவர்கள் அனைவரும் மேற்படி உறுதியைப் பூண்டுள்ளனராம்.

'தமிழ் இன உரிமை மீட்புக் கூட்டமைப்பு' என இக்கூட்டமைப்புக்குப் பெயரிடுவது எனவும் தமிழர்தம் ஒற்றுமையை உணர்த்து முகமாகவும், அவர்கள் தம் வாழ் வொளியைக் காக்க ஒன்றிணைந்து விட்டார்கள் என்பதைக் குறிக்குமுகமாகவும் பல கைகள் ஒன்றிணைந்து ஒரு ஜோதியை காப்பதான சின்னத்தை இக் கூட்டமைப்பின் சின்னமாக ஏற்றுக்கொள்வது என்றும் தலைவர்கள் ஏகமனதாய் முடிவு செய்துள்ளனராம்.

இவ்வமைப்புக்கான தலைமையகக் கட்டடத்தை வடக்கு, கிழக்கு எனும் பிரிவு ஏற்படாவண்ணம் இரு பிரதேசங்களுக்கும் பொதுவான ஒரு இடத்தில் தமிழர்தம் பாரம்பரியத்தையும் ஒற்றுமையின் பலத்தையும் மற்றவர்களுக்கு உணர்த்தும் வண்ணம் நம் கலாசார முறைப்படி பிரமாண்டமாக அமைப்பதென்றும் முடிவு செய்தனராம்.

இவ்வமைப்புக்கான உறுப்பினர் படிவங்கள் தயாரிக்கப்பட்டு உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வது எனவும் மாதந்தோறும் இவ்வுறுப்பினர் எண்ணிக்கையில் வளர்ச்சியைக் கண்காணிப்பது எனவும் வருடத்தில் ஒருதரம் அத்தனை உறுப்பினர்களையும் ஒரு பொது இடத்தில் திரட்டிப் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துவது எனவும் அப் பொதுக் கூட்டத்திற்கு இலங்கையில் இருக்கும் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் விருந்தினர்களாய் அழைப்பதோடு ஒரு வெளிநாட்டுத் தலைவரை சிறப்பு விருந்தினராகவும் அழைப்பித்து நம் இன ஒற்றுமைப் பலத்தை உலகறியச் செய்வதெனவும் தலைவர்கள் முடிவு செய்தார்களாம். நமது தாயகத்தில் இன்று இருபத்திரண்டு இலட்சத்து எழுபதாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்வதாகவும் அவர்களுள் பதினைந்து இலட்சம் பேர் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் எனவும் புலம்பெயர் நாடுகளில் எட்டரை இலட்சம் ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. (2012 கணக்கெடுப்புப்படி) இப்புதிய கூட்டமைப்பை ஆரம்பித்து ஒரு வருட எல்லைக்குள் நம் தாயகத்தில் பத்து இலட்சத்திற்கு மேற்பட்டவர்களையும் புலம்பெயர் நாடுகளில் ஏழு இலட்சத்திற்கு மேற்பட்டவர்களையும் இக் கூட்டமைப்பின் உறுப்பினர்களாக்குவது என்றும் தலைவர்கள் ஏகமனதாய் முடிவு செய்தனராம்.

அரசியல் சார்ந்து வரும் பதவிகளை வழங்குவதில் தகுதிக்கு முதலிடம் கொடுத்த பின்பு அத்தகுதி பெற்ற, இனவளர்ச்சிக்கு உண்மையாய்ப் பாடுபடும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்குவது என்றும், அச்செயல் மூலம் இனநலன் நோக்கி இயங்குவோரை ஊக்குவிப்பது என்றும் மேற்படி கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாம்.

மேற்படி கூட்டமைப்புக்கென பெரிய அளவிலான நிதித்தளம் ஒன்றை உருவாக்குதல் அவசியம் என்பதால்மாதந்தோறும்தாயகத்திலும் வெளிநாடுகளிலும் உறுப்பினர்களால் திரட்டப்படும் நிதியை, 'ஈழத் தமிழர் நல்வாழ்வு நிதியம்' என்னும் பெயரில் ஓர் அறக்கட்டளையை உருவாக்கி அந்நிதியத்தில் அதனைச் சேமித்து தமிழ்ப் பிரதேசங்களின் அவசியமான மக்கள் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற அந்நிதியைப் பயன்படுத்துவது எனவும் தலைவர்கள் முடிவெடுத்தனராம்.

மேற்படி அமைப்புக்காக பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பதான ஊடக அமைப்புக்களை உருவாக்குவது எனவும் அதன்மூலம் இயக்கக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பி, எதிர்ப்பரப்புதல் செய்வோரை முறியடித்து வெற்றி கொள்வதெனவும் தமது ஊடக பலம் கொண்டு கட்சியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முனைவோரைப் புறந்தள்ளி செயற்படுவதெனவும் அவ் ஊடகங்களின் மூலம் மாற்றினத்தாரும் தமிழர்தம் நியாயபூர்வமான கோரிக்கைகளை அறியும் வண்ணம் பரப்புதல் செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டதாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4000 பில்லியன் ரூபாய் மோசடி குறித்து விசாரணை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரை இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 4000 பில்லியன் ரூபா மோசடி குறித்து உரிய விசாரணை நடத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்வி: மத்திய வங்கி விசாரணை அறிக்கை எப்படி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு சமர்ப்பிக்கலாம்?

பதில்: அவர் தகவலறியும் சட்டமூலத்தைப் பயன்படுத்தி அதைப் பெற்றிருக்கலாம். தற்போது பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் அறிக்கையின் பிரதிகளை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் மத்திய வங்கிக்கும் அனுப்பியிருந்தார். ஆனால் பிரதமர் முதலில் அமைச்சரவைக்கு அனுப்புமாறு கேட்டிருந்தார்.

அதன் பின்னர் பாராளுமன்றத்திற்கும்வழங்கவேண்டுமென கூறியிருந்தார். ஆனால் தற்போது முன்னாள் நிதி அமைச்சர் அறிக்கையில் தனது பெயர் இல்லையெனக் கூறுகிறார். அவரது பெயர் அறிக்கையில் இல்லாவிடின் ஜனாதிபதி வெறுமனே கூறுவாரா? ஜனாதிபதி அதிலுள்ள விடயங்களையே கூறினார்.

கேள்வி: எவ்வளவு காலத்தில் சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்யும்?

பதில்: (தயாசிறி) சட்டமா அதிபர் திணைக்களம் இந்த அறிக்கையை ஆராய்ந்து வருகிறது. எனவே விரைவில் தேவையான நடவடிக்கைகள் எடுத்து வழக்கு தாக்கல் செய்யும்.

கேள்வி: ஆறு மாதங்கள் ஆகுமா?

பதில்: இல்லை இல்லை. ஒருமாதத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம்.

பதில்:(ராஜித) 2008, 2014 காலத்தில் இடம்பெற்ற 4000 பில்லியன் ரூபா மோசடி தொடர்பாகவும் விசாரணை நடத்தப்படும். நீங்கள் இதில் அவசரப்படாதீர்கள். நாங்கள் தேவையான நடவடிக்கை எடுப்போம். ஊடகங்கள் இந்த 4000 பில்லியனை விட்டு விட்டு 11 பில்லியன் குறித்தே பேசிக்கொண்டிருக்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எந்த முன்னேற்றமும் இல்லை விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் நாட்டில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.



பிங்கிரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் இதுவரை எந்த முற்போக்கான வேலைத்திட்டங்களையும் செய்யவில்லை.

அதேபோல் நாட்டிலுள்ள பெண்கள் எவரும் மது அருந்த அனுமதி தாருங்கள் எனக் கூறி ஊர்வலம் செல்லவில்லை.

நிதியமைச்சு வெளியிட்ட மதுபான விற்பனை நிலையங்கள் சம்பந்தமான மற்றும் ஏனைய சுற்றறிக்கைகளை ஜனாதிபதி இரத்துச் செய்துள்ள போதிலும் அவரது உத்தரவு அமுல்படுத்தப்படுமா? என்ற சந்தேகம் காணப்படுகிறது எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (இ-7)

# எரிபொருள் நிலையத்திற்கு சீல்

(கொழும்பு)

ராஜகிரிய- நாவல பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிலையம் ஒன்று நேற்று முன்தினம் இரவு சீல் வைக்கப்பட்டதாக இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிலையத்தின் விநியோக குழாயினைப் பயன்படுத்தி எரிபொருள் பவுசர் வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் நிரப்பப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் குறித்த நிலையத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிலையத்திலுள்ள எரிபொருள் விநியோக குழாயில் பவுசர் வாகனத்திற்கு எண்ணெய் விநியோகிப்பது சட்டவிரோத செயற்பாடெனவும், குறித்த செயற்பாடு நாவல எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டமையானது அவசர சுற்றிவளைப்பு பிரிவினரால் ,உறுதியாகியுள்ளது.

நாவல திறந்த பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள குறித்த எரிபொருள் நிலையத்தில் விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த எரிபொருள் நிலையம் திறக்கப்படாதென எரிபொருள் கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிலையத்திற்கு சீல் வைக்கப்பட்டமையால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மன்னிப்பைக் கோருவதாகவும் இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# 41 ஆயிரம் வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில், தபால் மூலம் வாக்களிப்பதற்காக அளிக்கப்பட்ட சுமார் 41 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் மொத்தமாக சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் அரச ஊழியர்கள் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்திருந்தனர்.

இதில், தவறாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் என, சுமார் 41 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அளிக்கப்பட்டுள்ள தபால் மூலவாக்களிப்பு விண்ணப்பங்களில், குருநாகல் மாவட்டத்தில் இருந்தே அதிகளவான - 67,411 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகக்குறைவான விண்ணப்பங்கள் - 1,558 முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-7)

# எம்பிலிப்பிட்டியவில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

(கொழும்பு)

எம்பிலிப்பிடிய, கடுபிலகம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த துப்பாக்கிப் பிரயோகம் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 39 வயதுடைய ஒருவரே இதன்போது உயிரிழந்ததுடன், துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டவர் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-

# பாடசாலைச்சூழலைப் பாதுகாக்க தவறும் அதிபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## கல்வி இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலை வளாகத்தை முழுமையாக சுத்தமாக வைத்திருக்க வேண்டிய பொறுப்பு பாடசாலையின் அதிபர்களையே சாரும். அத்துடன் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பும் அதிபர்களுடையதே. இதனை முறையாக செய்யாத அதிபர்கள் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமகல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார். (இ-7)

# அமைச்சரவைக்குள் கூட நல்லிணக்கம் இல்லை!

## ஜி.எல்.பீரிஸ் விசனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால்தனது அமைச்சரவையையே வழிநடத்த முடியவில்லை. இவ்வாறான நிலையில் அவரால் எவ்வாறு நாட்டை வழிநடத்த முடியுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கேள்வியெழுப்பினார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்புநேற்றுமுன்தினம் பொறளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது இடம்பெறும் நிகழ்வுகளை நோக்கும் போது விநோதமாக உள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இவ்வாறான குற்றச்சாட்டுக்களின் பின்னணியில்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இல்லையென்றும் கூற முடியாது.

நல்லிணக்க அரசாங்கம் எனக் குறிப்பிடுகின்றனர். எனினும் அமைச்சரவைக்குள்கூட நல்லிணக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அமைச்சரவையின் தலைவராக ஜனாதிபதி உள்ளார். ஆயினும் அவரால் அமைச்சரவையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து அவர் இடைநடுவில் வெளிநடப்புச் செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.


மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜையாவார். இவ்வாறான நிலையில் சிங்கப்பூர் பிரதமர் விரைவில் இலங்கைக்கு வருகைதரவுள்ளார். எனவே அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து அவரை நாட்டின் நீதித் துறையின் முன்னிலையில் ஆஜர்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சிங்கப்பூர் பிரதமரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும். எனினும் அரசாங்கம் அதனைச் செய்யப் போவதில்லை.

எனவே ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவும்பதவி வகிக்கும்வரையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்கப்போவதில்லை. எனினும் எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் குறித்த மோசடியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 14.01.2018-12.02.2018



பொதுப்பலன்

உங்களுக்குத் தை மாதம் விரயங்கள் அதிகரிக்கும் மாதமாக அமையப்போகின்றது. வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் வேலை மாற்றங்களும் வந்துசேரும். உழைப் பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. உடனிருப்பவர்கள் பகையாகலாம். முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவது நல்லது. வங்கிச் சேமிப்பு கரையும். வாரிசுகளால் நிம்மதி குறையும். ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் உடல் நலனில் அக்கறை தேவை.

உத்தியோகம்

அலுவலக பணியாளர்களுக்கு திடீர் இடமாற்றங்கள் உருவாகும். நீண்ட தூரப் பயணங்களும் உண்டு. உயர்பதவியில் உள்ளவர்களை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. தொழில் செய்பவர்களுக்கு இரவு, பகலாக பாடுபட்டும் எதிர்பார்த்த இலாபம் கிடைக்காது. பங்குதாரர்கள் பணத்தை பிரித்துக் கொடுக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்துவர். பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் முன்பாக ஆலோசித்துச் செய்யுங்கள்.

உடல்நலம்

ஜென்ம குருவின் ஆதிக்கம் இருப்பதால் அடிக்கடி உடல் நலத்தில் தொல்லைகள் ஏற்படும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லை உண்டாகலாம். மருத்துவ ஆலோசனைகளை உடனுக்குடன் பெற்றுக்கொண்டால் மட்டுமே உற்சாகத்துடன் பணிபுரிய இயலும்.

குடும்பம்

குடும்ப ஸ்தானத்தில் கேது இருப்பதால் பல் வேறுவிதமான பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். உடனிருப்பவர்கள்மற்றும்உடன்பிறப்புகளின்ஒத்துழைப்பு குறையும் கடமையைச்செய்ய இயலாமல் கலக்கமடைவீர்கள். வாழ்க்கைத் துணையோடு விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள்.

பணவரவு

சேமிப்புகள் கரையும் நேரமிது. தனாதிபதி சனி ஜென்ம இராசியில் சஞ்சரிப்பதால் வருமானம் திருப்திகரமாக இருந்தாலும், கைக்கு வந்தவுடன் செலவாகிவிடும். எனவே சில்லறைக் கடன்களை கொடுத்து விடுங்கள்.

சனியுடன் புதன்

மாதத் தொடக்கத்தில்உங்கள் இராசியிலேயே சனியும், புதனும் சஞ்சரிக்கிறார்கள். தன சகாய ஸ்தானாதிபதியான சனி ஜென்மச் சனியாக

## சேமிப்பு கரையும்!

வரும்பொழுது சிக்கல்களும் சிரமங்களும் உருவாகலாம். பக்கபலமாக இருந்தவர்கள் விலகுவார்கள்.

மூன்று கிரக சேர்க்கை

வாக்கு ஸ்தானத்தில் சூரியன், கேது, சுக்ரன் ஆகிய 3 கிரகங்கள் சஞ்சரிப்பதால், கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வது நல்லது. சூரிய பலத்தால் முன்கோபம் அதிகரிக்கலாம். 2இல் கேது 8இல் ராகு இருப்பதால் சர்ப்ப தோஷம் உருவாகின்றது. எனவே அதற்குரிய பிரீதி செய்யுங்கள்.




விருச்சிக செவ்வாய்

ஜனவரி 20ஆம் திகதி விருச்சிகச் செவ்வாயின் சஞ்சாரத்தால் மன அமைதி குறையும். விரயங்கள் கூடும். பிள்ளைகளால் பிரச்சினை உருவாகலாம்.

புதன் சஞ்சாரம்

ஜனவரி 22ஆம் திகதி மகரத்திலும், பெப்ரவரி 8ஆம் திகதி கும்பத்திலும் புதன் சஞ்சாரம் செய்கிறார். இந்தக் கால கட்டத்தில் வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். புதிய தொழில் தொடங்கும் ஆர்வம் உருவாகும்.

சுக்ரன் சஞ்சாரம்

பெப்ரவரி 7ஆம் திகதி கும்பத்தில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதனால் நீண்ட நாளாக வேலை கிடைக்காதவர்களுக்கு, வேலை கிடைக்கலாம். பணிபுரிபவர்களுக்கு இலாகா மாற்றமோ, ஊர் மாற்றமோ கிடைக்கும்.

வழிபாடு

அறுபத்து மூன்று நாயன்மார் வழிபாடு நன்மை தரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். நினைத்த காரியங்கள் நிறைவேறும். திருமணத்தடை அகலும். திடீரென்று சந்திக்கும் உறவினர்களால் உங்கள் தேவைகள் பூர்த்தியாகும் வாகனம்வாங்கிமகிழும்யோகம்உண்டு. கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அகல விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்குப் புதிய இடத்தில் வேலை அமையும் ஆபரணச் சேர்க்கை உண்டு.

கலைத்துறை

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் பொழுது சிந்தித்துச் செயற்படுங்கள். சக கலைஞர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கலாம். நடிப்பு மற்றும் நடனத் துறையில் இருப்பவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் வந்து சேரும்.

அரசியல்

தங்கள் புகழைத் தக்க வைத்துக்கொள்ள அதிக முயற்சி எடுக்கும் சூழ்நிலை உருவாகும். மறைமுக எதிர்ப்புகள்வலுவடையும் மக்கள் ஆதரவைப் பெற நல்ல பணிகளை மேற்கொள்வது உகந்தது. வரவைக் காட்டிலும் செலவு கூடும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



பொதுப்பலன்

உங்களுக்குத் தை மாதம் ஏழரைச் சனியின் ஆதிக்கத்தோடு தொடங்குகிறது. 3 சுற்றுகள் அல்லது 4 சுற்றுகள் வரும் ஏழரைச் சனியின் 2ஆவவது சுற்று நடப்பவர்களுக்கு இப்பொழுது யோகம். இருப்பினும், விரயச் சனியின் ஆதிக்கம் என்பதால் விரயங்கள் கூடும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

உத்தியோகம்

அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள், மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. சக பணியாளர்களின் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்திக்க நேரிடும். தொழில் செய்பவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. கூட்டாளிகளை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளால் பிரச்சினைகள் ஏற்படும். பங்குச் சந்தையில் ஈடுபட்டிருப்பவர்கள் எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

உடல்நலம்

உங்கள் இராசியிலேயே அஷ்டமாதிபதி சூரியனுடன் கேது இணைந்து சஞ்சரிப்பதால், வாயு மற்றும் உஷ்ண ஆதிக்க நோய்களால் பாதிப்பு ஏற்படலாம். மருத்துவச்செலவுகள் கூடும். உடனிருப்பவர்களுக்கும் மருத்துவச் செலவுகள் வரலாம். அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். உடல் நலத்தில் அலட்சியம் காட்ட வேண்டாம்.

குடும்பம்

குடும்ப உறுப்பினர்களிடையே வாக்கு வாதங்கள் அதிகரிக்கும். ஒருவரையொருவர் அனுசரித்துச் சென்றால் தான் அமைதி கிடைக்கும். உறவினர்களின் ஆதரவு ஒரு நேரத்தில் கிடைத்தாலும், ஒரு நேரத்தில் கிடைக்காது. தேவையற்ற பிரச்சினைகள் வந்து கொண்டேயிருக்கும். குடும்பச்சுமை கூடும். செலவுகளைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைக்கலாம்.

பணவரவு

## சனியால் சஞ்சலம்!

தனாதிபதி சனி பகவான் விரய ஸ்தானத்தில் இருப்பதால் வரவைக் காட்டிலும் செலவு கூடும். இருப்பினும் குரு பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டே இருக்கும். ஆனால் சேமிக்க இயலாது.

மூன்று கிரக சேர்க்கை

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சூரியன், சுக்ரன், கேது ஆகியோர் சஞ்சரிக்கிறார்கள். சப்தம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். எனவே பாம்புக் கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. எனவே தொழிலில் ஏற்றமும், இறக்கமும் வந்துகொண்டே இருக்கும். இன்பமும், துன்பமும் கலந்தே வாழ்க்கை அமையும். அஷ்டமாதிபதி




சூரியன் இராசியில் இருப்பதால் தொழில் இழப்புகள் உருவாகலாம்.

சனியுடன் புதன்

12 ஆம் இடத்தில் சனியும், புதனும் இருப்பது அவ்வளவு நல்லதல்ல. வீண் விரயங்கள் அதிகரிக்கும். உரிய பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

விருச்சிக செவ்வாய்

ஜனவரி 20ஆம் திகதி விருச்சிகச் செவ்வாயின் சஞ்சாரத்தால் சொத்து விற்பனைகள் சுமுகமாக முடியும். புதிய முயற்சிகள் [illegible]

புதன் சஞ்சாரம்

ஜனவரி 22 ஆம் திகதி மகரத்திலும், பெப்ரவரி 8ஆம் திகதி கும்பத்திலும் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக உத்தியோக மாற்றங்கள் உருவாகும். பணிபுரியும் இடத்தில் பகை அதிகரிக்கலாம். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும்.

சுக்ரன் சஞ்சாரம்

பெப்ரவரி 7ஆம் திகதி கும்ப இராசிக்குச் சுக்ரன் செல்கிறார். எனவே கூடுதல் நன்மை கிடைக்கும். பற்றாக்குறை அகலும். புதிய பாதை புலப்படும்.

வழிபாடு

ஆதியந்தப்பிரபுவை வழிபாடு செய்யுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கலாம். எந்தச் செயலிலும் கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொண்டால் பிரச்சினைகள் ஏற்படாது. வாழ்க்கைத் துணையுடன் வாக்கு வாதங்களை தவிர்க்கவும். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துங்கள். மின்சாதனங்களை இயக்கும் பொழுது எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு பதவியில் பிரச்சினைகள் வரலாம். அலுவலகக் கோப்புகளை பத்திரமாக வைத்துக்கொள்வது நல்லது.

கலைத்துறை

உழைப்புக்கான வெற்றி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தன்னம்பிக்கையை தளரவிட வேண்டாம். மூன்றாம் நபரின் வார்த்தைகளை நம்பி முடங்கி இருப்பதும் கூடாது.

அரசியல்

எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள். மேலிடத்து ஆதரவு குறையலாம். முகஸ்துதி செய்து பேசும் நபர்களை நம்பி செயற்பட வேண்டாம். இது செலவுகள் கூடும் நேரமிது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்டெடுத்த கடிகாரம்

(நேற்றைய தொடர்ச்சி)

நாம காலையில ஸ்கூலுக்கு போய் நம்ம வாத்தியாருகிட்ட கொடுத்து விடுவோம் என்று சொல்லிவிட்டு அதை தன் கால்சட்டையில் போட்டுக்கொண்டு இருவரும் "பூ" பறிக்க தோட்டத்துக்கு சென்று விட்டனர்.

பூ பறித்துக் கொடுத்து கூலியைப் பெற்றுக்கொண்டு வந்த இருவரும் அவர்கள் அம்மாவிடம் கொடுத்துவிட்டு, அவசர அவசரமாய் பள்ளிக்குக் கிளம்பி விட்டனர். ஆனால் அந்தக் கைக் கடிகாரத்தை வீட்டில் குளிப்பதற்கு முன் ஒரு இடத்தில் வைத்த சுகுமாரன் பள்ளிக்குச் செல்லும் அவசரத்தில் அதை மறந்து விட்டான்.

இவர்கள் பள்ளிக்குச் சென்ற பின்தான் ஞாபகம் வந்தது கைக் கடிகாரத்தை வீட்டிலே விட்டு வந்தது. சரி நாளை எடுத்து வந்து கொடுத்து விடலாம் என்று சமாதானம் செய்து கொண்டான் சுகுமாரன்.

அன்று அந்த ஊரில் பொலிஸ் வண்டிகள் வந்தும் போய்க்கொண்டும் இருந்தன. பள்ளி நடந்து கொண்டிருக்கும் பொழுதே அந்த வண்டிகள் செல்வதை ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். மாலை வீட்டிற்கு வந்த பின்னர் அவர்கள் அப்பா கன்னையன் தான் சொன்னார், நம்ம பக்கத்து ஊர்ல இருக்கிற கோயில்ல இருந்த சிலைகளை யாரோ கடத்திட்டு போயிட்டாங்களாம். அதனாலதான் பொலிஸ் நம்ம ஊரு வழியா வந்துட்டும் போயிட்டும் இருக்கு.

காலை வழக்கம்போல பள்ளிக்குக் கிளம்பும் போது ஞாபகமாய் அந்த "கைக் கடிகாரத்தை" எடுத்து புத்தகப் பையில் போட்டுக்கொண்டான். வகுப்பு ஆசிரியரிடம் தான் பாதையில் கண்டெடுத்த கைக்கடிகாரத்தைக் கொடுத்தான். அவர் அவனையும் அழைத்துக் கொண்டு தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் அழைத்துச் சென்று இந்தக் கடிகாரத்தை கொடுத்து, விபரத்தை




தெரிவித்தார்.

நன்கு யோசித்த மெய்யப்பன், உடனே சுகுமாரனையும் அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையம் சென்று இந்தக் கைக் கடிகாரத்தை ஒப்படைத்து, விபரங்களைக் கூறினார். பொலிஸ் அதிகாரி சுகுமாரனைப் பாராட்டி அந்தக் கடிகாரத்தைப் பெற்றுக் கொண்டார். அதன்பின்சுகுமாரன் அந்த நிகழ்ச்சியை மறந்து விட்டான்.

சுமார் மூன்று மாதங்கள் ஓடியிருக்கும், ஒரு நாள் தலைமையாசிரியர் சுகுமாரனை அழைப்பதாக பள்ளி பணியாள் வந்து சொல்லவும் வகுப்பு ஆசிரியர் சுகுமாரனை தலைமையாசிரிடம் அனுப்பினார். எதற்குக் கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே அவர் அறைக்குள் நுழைந்தவன் அங்கு தலைமையாசிரியருடன் அன்று "கைக்கடிகாரத்தை" பெற்றுக் கொண்ட பொலிஸ் அதிகாரியும் இருந்தார். அவர் இவனைக் கண்டவுடன் எழுந்து அவன் கையைப் பற்றிக் குலுக்கி "வெல்டன் போய்" உன்னால ஒரு திருட்டுக் கும்பலையே பிடிக்க முடிஞ்சது என்று அவன் கையைக் குலுக்கினார்.

இவனுக்கும் ஒன்றும் புரியவில்லை, பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டு இருந்தவனை தலைமையாசிரியர் அழைத்து அன்று நீ ஒரு "கைக் கடிகாரத்தை" இந்த அதிகாரிகிட்ட கொடுத்தாயல்லவா? அது பக்கத்து ஊரில உள்ள கோயில் சிலை திருடின கூட்டத்தில இருக்கிற ஒருத்தனோடது. இவங்க அந்த கடிகாரத்தை வச்சே அந்த கூட்டத்தையே பிடிச்சுட்டாங்க. அதுக்குத்தான் உன்னை பாராட்டிவிட்டு போகணும்னு வந்திருக்கிறாங்க. அது மட்டுமல்ல அடுத்த வாரம் ஒரு விழா வைத்து உங்க அப்பா, அம்மா, உன் தங்கச்சி எல்லாரையும் கூப்பிட்டு பாராட்டப் போறாங்க. சொல்ல சொல்ல சுகுமாரனுக்கு ஒரே சந்தோசமாகி விட்டது.

அடுத்த வாரத்தில் நடந்த விழாவில் சுகுமாரனுக்கு பாராட்டு மட்டுமல்ல, அவனுக்கும், அவன் தங்கைக்கும் எவ்வளவு படிக்க முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கமே படிக்க வைக்கும் என்று அந்த மாவட்ட ஆட்சியர் அறிவித்து விட்டார். கன்னையனுக்கும் அவன் மனைவிக்கும் இதைவிட ஆனந்தம் வேறென்ன வேண்டும்.

(முற்றும்)

## 19.01.2018 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1806- நன்னம்பிக்கை முனையை பிரித்தானியா பிடித்தது.

❖1903- ஐக்கிய அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே முதலாவது வானொலி ஒலிபரப்பு ஆரம்பமாயிற்று.

❖1917- லண்டனில் ஆயுதக் களஞ்சியம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 73 பேர் கொல்லப்பட்டும் 400 பேர் காயமும் அடைந்தனர்.

❖1937-ஹோவார்ட் ஹியூஸ் லாஸ் ஏஞ்சல்ஸ் இலிருந்து நியூயோர்க் நகரத்திற்கு 7 மணிநேரம், 28 நிமிடங்கள், 25 நொடிகளில் பறந்து சாதனைப் புரிந்தார்.

❖1966- இந்திரா காந்தி இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖1986- முதற் கணனி நச்சுநிரலான பிரெயின் ((c)Brain) பரவத் தொடங்கியது.

❖1993-ஐபிஎம் நிறுவனம் 1992 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் $4.97 பில்லியன் நட்டத்தை அறிவித்தது, இன்று வரையில் அமெரிக்காவில் வேறொரு நிறுவனம் இந்த அளவில் நட்டம் அடைந்ததில்லை.

❖1997- 30 ஆண்டுகளுக்குப் பின்னர் யாசர் அரபாத் எபிரோன் திரும்பினார்.

❖2007- இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வாகரையைத் தாம் கைப்பற்றிவிட்டதாக இலங்கை இராணுவம் அறிவித்தது.

### பிறப்புகள்

❖1855-ஜி.சுப்பிரமணிய ஐயர், தமிழக இதழியலாளர் (இ. 1916)

❖1933- சீரகாழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசைப் பாடகர் (இ. 1988)

❖1937- அ. முத்துலிங்கம், இலங்கை-கனேடிய தமிழ் எழுத்தாளர்

### இறப்புகள்

❖1941- நேசம் சரவணமுத்து, இலங்கை அரசாங்க சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ்ப் பெண் (பி. 1897)

❖2000-மு.அ.சிதம்பரம், தமிழகத் தொழிலதிபர் (பி. 1918)

❖2011-தாமரைக்கண்ணன், தமிழக எழுத்தாளர், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், நூல் மதிப்புரையாளர் (பி. 1934)

❖2014- எஸ். ஜெ. தம்பையா, இலங்கை-அமெரிக்க மானிடவியலாளர், கல்வியாளர் (பி. 1929)

### சிறப்பு நாள்

❖[illegible] நாள் (திரிபுரா, இந்தியா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 100 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 120 | 120 |
| தக்காளி | 80 | 100 | 60 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 20 | 50 | 40 | 35 |
| கோவா | 60 | 50 | 70 | 60 | 40 |
| கரட் | 100 | 100 | 100 | 160 | 120 |
| பூசணி | 80 | 50 | 40 | 80 | 50 |
| புடோல் | 80 | 50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 200 | 400 | 350 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 120 | 140 | 130 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 200 | 220 |
| வெண்டிக்காய் | 150 | 200 | 100 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 120 | 120 |
| லீக்ஸ் | 100 | 200 | 220 | 240 | 220 |
| பீற்றூட் | 160 | 100 | 80 | 120 | 100 |
| கறிமிளகாய் | 180 | 120 | 150 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 400 | — | 800 | 1000 | — |
| போஞ்சி | 140 | 140 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 100 | 60 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 10 | 20 | 50 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 75 | 95 |
| இராசவள்ளி | 160 | 100 | 160 | 100 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 280 | — | 140 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 80 | 20 | 60 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் ஒருவரை கனவானாக்கி விடலாம்,
ஆனால் அவரை குணவானாக்கிவிட முடியாது.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


## நம்பிக் கெட்டது நானல்ல என்றால் நம்பிக் கெட்டது யார்?

இடைக்கால வரைபு வெளியாகிவிட்டது. அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் தமிழர்களுக்கு எல்லாம் இருக்கிறது. அடுத்த தீபாவளிக்குள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்றெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறிவருகிறது.

எனினும், அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

நிலைமை இதுவாகவிருக்கையில் உங்களோடு இனிமேல் இருக்க முடியாது என்று தன் அமைச்சர்களைப் பார்த்துக்கூறிவிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியேறுகின்ற அளவில்தான் தற்போதைய கள நிலை உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை விமர்சிக்கின்ற அளவில் அமைச்சர்கள் இருக்கின்றனர் என்றால், எங்கள் விடயத்தில் என்ன நடக்கும் என்பதை ஊகித்துக்கொள்வதில் கடினமிருக்க முடியாது.

எனினும் நல்லாட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நம்புகிறது என்றால் அதன் பின்னணி என்ன? என்று ஆராய்வது தமிழ் மக்களின் கடமையாகிறது.

இலங்கை அரசுக்கு ஐ.நா மனிதவுரிமை ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற விடயத்தில் கால அவகாசம் கொடுக்கக்கூடாது என்று பலரும் வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால், நல்லாட்சிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கால அவகாசத்துக்கு ஆதரவு தெரிவித்தது.

இதன் காரணமாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையத்தில் நிபந்தனைகளை அமுலாக்குவதற்கான கால அவகாசம் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டது. ஆனால், இன்று நல்லாட்சி நீடிப்பது கடினம் என்பது உறுதியாகிவிட்டது.

உங்களோடு இருக்க முடியாது. நம்பிக் கெட்டது நானல்ல என்று கூறிவிட்டு அமைச்சரவையை விட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியேறுகிறார் என்றால்,

எங்கள் பிரச்சினைக்கு நல்லாட்சி தீர்வு தருமா? என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகக் கூற வேண்டும். தவிர, நம்பிக் கெட்டவன் நானல்ல என்று ஜனாதிபதி மைத்திரி கூறும்போது யாரோ ஒரு தரப்பு நம்பிக் கெட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

நம்பிக் கெட்ட தரப்பு யார்? என்ற கேள்வி எழும்போது அதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியாக இருக்க முடியாது என்பது புரிதற்குரியது.

ஏனெனில் அந்தக் கட்சி சார்ந்தவர்கள் தான் ஜனாதிபதி மைத்திரிக்கு இடுக்கண் செய்கின்றனர். எனவே, ஜனாதிபதி மைத்திரி கூறுகின்ற நம்பிக் கெட்ட தரப்பு தமிழ் மக்களாகவே இருக்க முடியும்.

ஆம்! நல்லாட்சி தீர்வு தரும். எங்கள் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்பிய தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதால், நம்பிக் கெட்ட தரப்பு நிச்சயம் தமிழ் மக்களாகவே இருப்பர்.

இங்கு நம்பிக் கெட்டதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளடங்காது. ஏனெனில் இரா. சம்பந்தர் ஐயாவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்ததல்லவா? ஆக, நம்பிக் கெட்டது நம் தமிழினம் என்று கூறுவதே பொருத்துடையது.

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அதிகாரத்தை உரியமுறையில் பாவிக்கவில்லை

### காணாமல் போனோரை கண்டறியும் குழுவின் செயலாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்குரிய அதிகாரங்களை உரிய முறையில் பயன்படுத்தவில்லையென குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை மற்றும் அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு சார்பாக தனது அதிகாரங்களை பயன்படுத்தவில்லையென காணாமல் போனோரை கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது பதவியை பயன்படுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்கு தீர்வு வழங்காமை கவலையளிப்பதாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## நாடாளுமன்ற உறுப்பினர் சல்மான் இராஜினமா

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம்.சல்மான் தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 13 தேசியப் பட்டியல் ஆசனங்கள் கிடைத்தன.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையிலான தேர்தல் கூட்டு உடன்படிக்கைக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சியினால் இரு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கப்பட்டிருந்தன.

அதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக எம்.எச்.எம்.சல்மான் மற்றும் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## போராட்டம் கைவிடப்பட்டது

இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் முன்னெடுத்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து நாடுதழுவிய ரீதியில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்திருந்தனர். (ம)

## முன்னாள் நீதியரசர் பீரிஸுக்கு கொழும்பு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் நீதியரசரும் சட்டமா அதிபருமான மொஹான பீரிஸ் உள்ளிட்ட மூன்று பேருக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இவர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு தாக்கல் செய்திருந்த வழக்குத் தொடர்பிலேயே இந்த அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நீதியரசரும் சட்டமா அதிபருமான மொஹான் பீரிஸ், தற்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.பீ.நவாஸ், மின சாரத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.பி.பெர்டிணந்து ஆகிய மூவருக்கே இவ்வாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ் பிரதேசத்தில் சுன்னாகம் ஒரு பகுதி, Dr. சுப்பிரமணியம் வீதி, ஐயனார் கோவிலடி, மயிலணி, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், தெல்லிப்பழை, நீதிமன்ற கட்டடத் தொகுதி மல்லாகம், சுன்னாகம் மக்கள வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் பூட்சிற்றி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன் குளம், நட்டாண்கண்டல், கரும்புள்ளியான், தென் னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக் குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66ம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்கு கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாந்தசோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, கோவில் குளம், ஆச்சிபுரம், சமணன் குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரியகூமரசங் குளம், ஆசிக்குளம், சிதம்பரபுரம், அட்டம்பஸ்கட கிராமம், தவசிகுளம் கிராமம், பண்டா ரிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எந்தத் தெய்வத்தை எந்த மலர்களால் வணங்க வேண்டும்?

வாசனை இலலாதது, முடி, பூழ ஆகயவறறோடு சேரநதிருந்தது, வாடியது, தகாதவர்களால் தொடப்பட்டது, நுகரப்படடது, ஈரததுணி உடுததக கொணடு வரபபடடது, காய்ந்தது, பழையது, தரையில் விழுந்தது ஆகிய மலர்களை அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தக்கூடாது.

சமபக மொடடுத தவிர, வேறு மலரகளின மொட்டுகள் பூஜைக்கு உகந்தவை அல்ல.

முல்லை, கிளுவை, நொச்சி, வில்வம், விளா இவை பஞ்ச வில்வம் எனப்படும். இவை சிவபூஜைக்கு உரியவை.

துளசி, முகிழ்(மகிழம்), சண்பகம், தாமரை, வில்வம, செங்கழுநீர், மருக்கொழுந்து, மருதாணி, தர்பம், அருகு, நாயுருவி, விஷ்ணுக்ராந்தி, நெல்லி ஆகியவற்றின் இலை பூஜைக்கு உகந்தவை.

பூஜைக்குரிய பழங்கள் நாகப்பழம், மாதுளை, எலுமிச்சை, புளியமபழம, கொய்யா, வாழை, நெலலி, இலந்தை, மாம்பழம், பலாப்பழம்.

திருவிழாக் காலத்திலும், வீதி வலம் வரும் போதும், பரிவார தேவதைகளின அலங்காரததிலும மறறைய நாட்களில் உபயோகிக்கத் தகாததென்று விலக்கப்பட்ட மலர்களை உபயோகிக்கலாம்.

அபிஷேகம், ஆடை அணிவிப்பது, சந்தன அலங்காரம, நைவேதயம முதலிய முககிய வழிபாடடுக காலங்களில் கட்டாயமாகத் திரை போட வேண்டும். திரை போட்டிருக்கும் காலத்தில் இறை உருவைக் காணலாகாது.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சத்குருவின் ஐந்து அடையாளங்கள்

சத்குருவின் சந்நிதானத்தில்

ஞானம் பெருகுகிறது, துன்பம் மறைகிறது, எந்தக் காரணமுமின்றி மகிழ்ச்சி பொங்குகிறது, குறைபாடு மறைகிறது, ஏராளம் தொடங்குகிறது, எல்லாத் திறமைகளும் மலர்கின்றன.

எந்த அளவிற்கு நீங்கள் குருவினிடம் தொடர்பை உணர்கிறீர்களோ, அந்த அளவிற்கு இந்தக்குணங்கள் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படுகின்றன.

கண்களை மூடி உட்கார்ந்து குருவினிடம் உன்னுடைய...

உங்க... உண்மையின் குரு.



## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நல்லதையே பேசுங்கள்

✦ எவர அதிகமாக வீணபேசசுககளை பேசுகிறாரோ அவர ஏழ்மை நிலையை அடைவார்.

✦ உன் நாவைப் பேணிக்கொள்! நீ செய்த பாவங்களை எண்ணி எண்ணி கண்ணீர் சிந்து!

✦ எனக்குப் பின் நான் பயப்படுவதெல்லாம் திறமை மிக்க நாவு படைத்த நயவஞ்சகரைப் பற்றியதே!

✦ பேசுவது வெள்ளி என்றால் பேசாமல் மவுனம் கொள்வது தங்கமாகும்.

✦ கெட்ட வார்த்தைகள் பேசுபவன் மீது இறைவன் கோபம் அடைகின்றான்.

✦ ஒரு மனிதன தன நாவைக காததுக கொணடால அல்லாஹ் அவனுடைய மானத்தைக் காத்துக் கொள்வான்.


✦ நாவை அடக்கியாளுங்கள். அதற்கு அதிகாரம் கொடுக்காதீர்கள். உங்கள் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து அது இயஙகடடும. இதில தான வெறறி இருககிறது.

✦ மற்றவர் குறைகளை மறைப்பவர் குறைகளை இறைவன் மன்னித்து விடுகின்றான். நபிகள் நாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச செயலக போட்டி முடிவுகள்










2018 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண்களுக்கான கரம் போட்டியானது 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆண்களுக்கான குழுநிலைப் போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகம் விளையாடியது. இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக்கொண்டது.

ஆண்களுக்கான இரட்டையர் போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த கணேசானத் மற்றும் மதுஷன் ஜோடியை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த அனுராம் மற்றும் சோபானத் ஜோடி விளையாடியது.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த கணேசானத் மற்றும் மதுஷன் ஜோடி வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான சிறந்த ஜோடியாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தினைச் சேர்ந்த தீபிகனை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த நிவேந்தன் விளையாடினார். இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த தீபிகன் வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

பெண்களுக்கான குழுநிலை கரம் போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகம் விளையாடியது.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக்கொண்டது.

பெண்களுக்கான இரட்டையர் போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த துஷாயினி மற்றும் பவதாரனி ஜோடியை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த மேரி மேனகா மற்றும் கிருஸ்ணபிரியா ஜோடி விளையாடியது.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த துஷாயினி மற்றும் பவதாரனி ஜோடி வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான சிறந்த ஜோடியாக தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்களுக்கான ஒற்றையர் போட்டியின் இறுதிப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த டிஷாந்தியை எதிர்த்து காமாட்சி விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த கேசாயினி விளையாடினார்.

இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினைச் சேர்ந்த டிஷாந்தி வெற்றி பெற்று 2018ஆம் ஆண்டிற்கான சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டார்.

ஆண், பெண்களுக்கான சதுரங்க போட்டியானது 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியின் ஆண்களுக்கான போட்டியில் G.குகன் முதலாமிடம் பொற்பதி இந்து வி.க., அஜித்குமார் இரண்டாமிடம் K.C.C.C.வி.க., U.நிசாந்தன் மூன்றாமிடம் Y.M.H.A. வி.க. ஆகிய இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் பெண்களுக்கான போட்டியில்,

U.சுமித்திரா முதலாமிடம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம், V.தர்ஸ்யகி இரண்டாமிடம் நண்பர்கள் விளையாட்டுக்கழகம், B.மதுஷா மூன்றாமிடம் சிவகுரு பொற்பதி வி.க. ஆகிய இடங்களை பெற்றுக் கொண்டனர். 2018 ஆம் ஆண்டுக்கான நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான போட்டியானது கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை அரியாலை உதை பந்தாட்ட பயிற்சி நிலைய மைதா னத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் இறுதிப் போட்டியில் திருநெல்வேலி ஒலிம்பிக் விளை யாட்டுக் கழகத்தினை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் விளையாடியது.

இப்போட்டியில் 3:0 என்ற ரீதியில் திருநெல்வேலி ஒலிம்பிக் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 2018 ஆம் ஆண்டிற்கான வெற்றிக் கேடயத்தினை தனதாக்கிக்கொண்டது. (க)

# ஐ.சி.சியின் சிறந்த வீரர் ஹோலி



2017ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரராக இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. 2017ஆம் ஆண்டிற்கான சிறந்த வீரர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருவது-20 போட்டிகளில் சிறப்பாக செயற்பட்ட வீரர்களைக் கௌரவிக்கும் விதமாக, ஆண்டின் சிறந்த வீரர்களுக்கான விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில் 2017ஆம் ஆண்டிற்கான சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதுக்கு இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டில் 26 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய ஹோலி 6 சதங்கள், 7 அரைசதங்களுடன் 1,460 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இந்திய அணித்தலைவர் பதவியில் இருந்து மகேந்திர சிங் டோனி பதவி விலகியதைத் தொடர்ந்து மூன்று விதமான கிரிக்கெட் போட்டிக்கும் விராட் ஹோலி தலைமை வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும், 2017ஆம் ஆண்டிற்கான சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரருக்கான விருதுக்கு, அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)

# பாண்டியாவை என்னுடன் ஒப்பிடாதீர்கள் - கபில்தேவ்



இந்திய அணி வீரர் ஹர்திக் பாண்ட்யாவை தன்னுடன் ஒப்பிட வேண்டாம் என இந்திய அணியின் முன்னாள் வீரரான கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

பாண்ட்யாவிடம் நிச்சயம் திறமை இருக்கிறது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் போட்டியிலேயே அதைக் காண முடிந்தது.

ஒவ்வொரு போட்டிக்கும் உளவியல் ரீதியாக அவர் தயாராக வேண்டும், தேவையற்ற உத்தியை பயன்படுத்தி விக்கெட்டுகளை இழக்கும் பட்சத்தில் பாண்ட்யாவை என்னுடன் ஒப்பிட வேண்டாம் என தெரிவித்துள்ளார். மேலும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாண்ட்யாவை மோசமாக விக்கெட்டை பறிகொடுத்ததாகவும் விமர்சித்துள்ளார். (க)

# சதுரங்க சம்மேளனத்தின் நொவிஸ் போட்டிகள்

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் நொவிஸ் பிரிவு சதுரங்கப் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் தொடர்ந்து நடைபெறும். போட்டியில் பங்குபற்ற விரும்பும் சர்வதேச தரப்படுத்தற் புள்ளிகள் பெறாத எவரும் வயது, பால் வேறுபாடின்றி இப்போட்டியில் பங்குபற்ற முடியும். பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் போட்டிக்கான கட்டணம் மற்றும் விளையாட்டு உபகரணங்களுடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு 19.01.2018 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். பிற்பகல் 3.30 இற்குப் பின்னர் வருகை தருவோர் போட்டியில் கலந்து கொள்ள முடியாது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணை முறி தொடர்...

ணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில முன்வைத்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், மொத்தமாக 103 பக்கங்கள் இவ்வாறு தொலைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி ஊழல் மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தியதுடன், அதன் அறிக்கை நேற்றுமுன்தினம் புதன்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளித்தது.

இதுதவிர, குறித்த அறிக்கையின் முழு வடிவம் இணையத்தளத்திலும் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, குறித்த அறிக்கையில் மொத்தமாக 1257 பக்கங்கள் காணப்படுகின்றன. ஆனால் இணையத்தளத்தில் சென்று பார்த்தால் அதில் 1154 பக்கங்களே உள்ளன. இதன்படி 103 பக்கங்கள் மாயமாகியுள்ளன என்று தெரிவித்தார். (ம)

## ஜனாதிபதியின் பதாகை...

டாரத்தில் அமைந்துள்ள வேட்பாளரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். (ம-281)

## தனியார்-இ.போ.ச...

கப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தும் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற பேருந்தும் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் சந்தித்துக் கொண்டன.

இதன் பின்னர் இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்து சாரதி தனியார் பேருந்தை மோதுவது போன்று பேருந்தை எடுத்துள்ளார். இதன்போது தனியார் பேருந்து நடத்துனர் இ.போ.ச பேருந்து நடத்துனரை பேசியுள்ளார்.

அப்போது பேருந்து நடத்துனர் தனியார் பேருந்து நடத்துனரை தாக்க வந்ததாகவும் தனது தற்பாதுகாப்பிற்காக இ.போ.ச நடத்துனரை தாக்கியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் கிடைத்தவுடன் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் தனியார் பேருந்தை கொடிகாமத்தில் பயணிகளை இறக்கி விட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி உத்தரவிட்டனர்.

இ.போ.ச பஸ் நடத்துனரை பொலிஸ் நிலையம் அழைத்து சென்ற அதேவேளை பயணிகளை யாழ்ப்பாணத்தில் இறக்கி விட்டு பேருந்துடன் பொலிஸ் நிலையம் வரும்படி உத்தரவிட்டுள்ளனர்.

மேலும் இரு பேருந்து நடத்துனர்கள் மீதும் சாவகச் சேரி பொலிஸ் நிலையத்தில் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## நேபாள இராணுவத்...

தை நேற்று வியாழக்கிழமை வந்தடைந்த நேபாள இராணுவத் தளபதியை இலங்கை இராணுவ பதவி நிலை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்.

ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு தலைமை அதிகாரி மற்றும் முப்படைத் தளபதிகளைச் சந்தித்து நேபாள இராணுவ தளபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (ம)

## இரு ஆலயங்களில்...

திருடப்பட்ட பொருட்களில் சில அயலில் உள்ள தோட்டக் காணி ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று அதிகாலை ஏழாலை மகா வித்தியாலயத்துக்கு அருகில் சந்தைக்கு சென்ற வயோதிபர் ஒருவரை தாக்கி விட்டு அவரது பணம் பறித்து செல்லப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. (ம-105)

## யாழ்.பரமேஸ்வரா சந்தி...

தல் வரை மூடப்பட்டிருந்த நிலையில் நேற்றையதினம் விரிவுரைகள் ஆரம்பித்திருந்தன.

இந் நிலையில் நேற்று இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-4,9)

## கொடிகாமம் புத்தூர்...

போது அவர்கள் பயணித்த காரானது கொடிகாமம் புத்தூர் சந்திக்கு அண்மையில் பழுதடைந்துள்ளது. இதன்போது காரில் வந்தவர்கள் சக்கரத்தை கழற்றி மற்றைய சக்கரத்தை பழுது பார்த்துக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்களிடம் கைத்துப்பாக்கியை காண்பித்து மிரட்டியுள்ளனர்.

அத்துடன் அவர்களது உடமையில் இருந்த 5 இலட்சம் ரூபா பணம் மற்றும் 6 பவுண நகை என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளனர். இதனையடுத்து குறித்த தம்பதிகள் கொடிகாமம் பொலிஸாரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையிலும் கொள்ளையர்களின் அடையாளங்கள் தொடர்பாக வழங்கிய தகவல்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக கொள்ளையில் ஈடுபட்ட இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கொடிகாமம் பகுதியில் வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட இவ் இருவரில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற கஞ்சா கடத்தல் தொடர்பில் தேடப்பட்ட நபர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதேவேளை கைது செய்யப்பட்ட இருவரிடமும் தொடர்ச்சியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதனை தொடர்ந்து அவர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4)

## பயங்கரவாத...

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு இலங்கை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதுடன் சர்வதேச நியமங்களுக்கு அமைவான சட்டத்தினூடாக அது பதிலீடுசெய்யப்படவேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பில் தொடர்ந்தும் உறுதியாகவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான இணை ஆணைக்குழு சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றபோதே ஐரோப்பிய ஒன்றியத்தரப்பினர் தமது எதிர்பார்ப்பை தெளிவுபடுத்தியுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் விடயத்தில் விரைவாக தீர்வைப் பெற்றுத்தருவது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர அடிப்படைச் சட்டப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக குற்றவியல் நடைமுறைக் கோவையை திருத்தியமைக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி மற்றும் 2017 மார்ச் 23ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவதில் காணப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் இருதரப்பினரும் ஆராய்ந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

எஞ்சியுள்ள பொறிமுறைகளான உண்மையைக் கண்டறிதல், நல்லிணக்கம், இழப்பீடு மற்றும் நீதி தொடர்பிலான பொறிமுறைகளை நிறுவுவது தொடர்பில் தனது அர்ப்பணிப்பை இலங்கை இதன்போது மீள உறுதிப்படுத்தியதாகவும் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக ஐரோப்பிய வெளியக நடவடிக்கை சேவையின் ஆசிய பசுபிக் வலயத்திற்கு பொறுப்பான பிரதி நிர்வாகப் பணிப்பாளர் பவோலா பம்பலோனியும் இலங்கை சார்பாக வெளிவிவகார செயலாளர் பிரசாத் காரியவசமும் இந்த சந்திப்பின் போது இணைத்தலைவர்களாக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வருட இறுதியில் பிரசல்ஸில் நடைபெறவுள்ள அடுத்த சந்திப்பிற்கு முன்பாக தொடர்ச்சியான அவதானிப்பு நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இருதரப் பினரும் இணக்கம் தெரிவித்ததாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிகையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

## சட்டமா அதிபர்...

பொறுப்பினை ஏற்காது தனிநபர் பொறுப்பாக கூறப்படுமாயின் தற்போது எவ்வாறு மக்கள் வரிப் பணத்தில் இயங்கும் சட்டமா அதிபர் தனிநபருக்காக வாதாட முடியும் என்ற கேள்வியும் ஏற்படுகின்றது.

மேலும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் அறிக்கையின் படி இலங்கையில் யுத்தக்குற்றங்களானது தனிப்பட்ட நபர்களூடாக மாத்திரமன்றி பரவலாக கட்டமைப்பு ரீதியாக இடம்பெற்றுள்ளதாகவும் அதற்கு இலங்கை அரசாங்கமும் பொறுப்பு கூற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ் வழக்கில் காணாமல் போனோர் தொடர்பாக என்ன நடந்தது என்பது தொடர்பாக அரசாங்கம் கூற வேண்டும். ஆகவே முதலாம் எதிரி சார்பாக சட்டமா அதிபர் முன்னிலையாவது தொடர்பான விண்ணப்பத்திற்கு தாம் ஆட்சேபனை தெரிவிப்பதாகவும் வாதிட்டார்.

இது தொடர்பாக அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் எதிர்வாதத்தை முன்வைத்திருந்தார். அதாவது இவ் வழக்கில் இணைக்கப்பட்ட சத்தியகடதாசி மனுவினையும் ஆராய்ந்த சட்டமா அதிபருக்கு குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக தனிப்பட்ட குற்றப் பொறுப்பு உள்ளதாக கருதவில்லை. மேலும் மனுத்தாரரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எந்த இடத்திலும் அந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக சாட்சியங்களோ சான்றுகளோ இணைக்கப்படவில்லை எனவும் அது தொடர்பாக நீதிமன்றமே விசாரணையின் ஊடாக கண்டறிய வேண்டும் எனவும் வாதிட்டார். இருதரப்பு வாதங்களையும் அவதானித்த நீதிபதி இவ் வழக்கில் முதலாம் எதிரியான குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக சட்டமா அதிபர் முன்னிலையாக முடியுமா என்பது தொடர்பாக முத்தீர்ப்புக்களை அடிப்படையாக கொண்டு இரண்டு தரப்பினரும் எழுத்து மூல சமர்ப்பணம் செய்ய வேண்டும் என நீதிபதி கட்டளையிட்டார்.

தொடர்ந்து இவ் வழக்கின் முதலாம் எதிரியான குறித்த இராணுவ அதிகாரியான துமிந்த கெப்பிட்டி பெலான அடுத்த வழக்கு தவணையின் போது மன்றில் முன்னிலையாக வேண்டும் என பணிப்புரை பிறப்பித்ததுடன் இவ் வழக்கின் தொடர் விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதிக்கு ஒத்திவைக்க உத்தரவிட்டார். (ம-4)

## குற்றம் சாட்டப்பட்ட...

யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுமீதான விசாரணையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டு நாவற்குழிப் பகுதியில் காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் 3 பேரினால் யாழ்.மேல் நீதிமன்றத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆட்கொணர்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அம் மனுவில் முதலாம் எதிர் மனுதாரராக அக் காலப்பகுதியில் நாவற்குழியில் இருந்த படைமுகாம் பொறுப்பதிகாரியான துமிந்த கெப்பற்றி பொலாவயின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த மனு மீதான விசாரணை நேற்று மீண்டும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது எதிர்மனுதாரர்கள் தொடர்பில் மன்றில் தோன்றும் சட்டமா அதிபர் திணைகளத்தினால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே குறித்த இராணுவ அதிகாரிக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, தற்போதும் அவர் இராணுவத்தில் இணைந்து பணியாற்றி வருகின்றார் என்ற தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## நடவடிக்கை எடுத்த...

அவிசாவளை பகுதியில் வைத்து நேற்றைய தினம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவிசாவளை-கொஸ்கம பகுதியில் இடம்பெற்ற சுதந்திர கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இது தொடர்பில் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பொலநறுவைக்கு சென்றிருந்த ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் டட்லி சிறிசேன அவசரமாக சந்தித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் பிரதியமைச்சர் சிறிபால கம்லத்தின் புதல்வி திடீரென மரணமடைந்தார். இதனையடுத்து பசில் ராஜபக்ஷ அவசரமாக நேற்றுமுன்தினம் பொலநறுவைக்கு சென்றுள்ளார்.

பசில் ராஜபக்ஷ அங்கு வந்துள்ளதை கேள்விப்பட்டு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் அரசியல்வாதிகள் சிலர், சிறிபால கம்லத்தின் வீட்டுக்குச் சென்று அவரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

அப்போது எவரும் எதிர்பாராத வகையில் ஜனாதிபதியின் சகோதரரும், முதன்மையான அரிசி வர்த்தகருமான டட்லி சிறிசேன, பசில் ராஜபக்ஷவை சந்திக்க வந்துள்ளார்.

இதனையடுத்து சற்று நேரத்தின் பின்னர் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் பேஷல ஜயரத்ன அங்கு வந்து, பசில் ராஜபக்ஷவை சந்தித்துள்ளதாக கூறப்படுகிறது.

முன்னாள் பிரதியமைச்சர் சிறிபால கம்லத்தின் புதல்வி டெங்கு நோய் காரணமாக உயிரிழந்தார். 35 வயதான அவர் இரண்டு பிள்ளைகளின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கட்சி உறுப்பினர்களுக்கு...

பிரதமரினால் நேற்று வெளியிடப்பட்ட விஷேட அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது. பிரதமர் வெளியிட்டுள்ள விஷேட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

நாங்கள் அதிகாரத்திற்கு வந்தது ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்கே. கட்சி பேதமின்றி ஊழல்வாதிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கே.

பிணைமுறி மோசடி சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்ததுடன், அந்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினோம். எமது அமைச்சர்களும் நானும் ஆணைக்குழுவுக்கு சென்று சாட்சியமளித்தோம்.

குற்றச்சாட்டுக்கள் எழுந்த சமயத்தில் எந்தவொரு முன்னைய அரசாங்கங்களும் இதுபோன்று நடந்து கொண்டதில்லை என்று பிரதமரின் விஷேட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் பல சந்தர்ப்பங்களில் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. எனினும் அவை தொடர்பில் எந்த சந்தர்ப்பத்திலும் விசாரணை செய்யப்படவில்லை. பாராளுமன்றத்துக்கு தகவல் தெரிவிக்கப்படவில்லை.

இந்த பிணைமுறி விநியோகத்தால் பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனம் சட்டவிரோதமாக 9.2 பில்லியன் ரூபா நிதியை சம்பாதித்துள்ளதாக ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதன்காரணமாக ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி செயற்பட்டு 9.2 பில்லியன் ரூபா நிதியை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்த முழுமையான நிதியையும் அரசாங்கத்துக்கு மீளப் பெற முடியும். இதனால் அரசாங்கத்துக்கு எவ்வித நட்டமும் ஏற்படமாட்டாது.

அதேபோன்று இந்த மோசடியில் எந்த அதிகாரிகள் தொடர்புபட்டிருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அதுமாத்திரமன்றி ஆணைக்குழுவின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள எமது கட்சியின் உறுப்பினர்கள் இருந்தால், அவர்கள் தொடர்பில் தேடிப் பார்த்து தீர்மானம் எடுப்பதற்கு திலக் மாரப்பன தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி நாம் நடவடிக்கை எடுப்போம்.

நாங்கள் தேடிப்பார்ப்பது கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் சம்பந்தமாக மட்டுமல்ல. தற்போது குற்றம்சுமத்தப்படுகின்ற ஊழல் மோசடிகள் சம்பந்தமாகவும் தேடிப் பார்க்கின்றோம். விசாரணை நடத்துகின்றோம். சரியான நடவடிக்கையும் எடுப்போம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள விஷேட அறிக்கையில் கூறியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமா அதிபர் திணைக்களம் முன்னிலையாவதன் மூலம்...

அதிபர் திணைக்களம் ஆஜராகு மிடத்து அரசும் பொறுப்பு (State Responsibility) கூறுகின்றதா? அல்லது தனிப்பட்ட நபருக்கு தான் பொறுப்பு என்றால், இலங்கை மக்களுடைய வரிப்பணத்தில் செயற்படுகின்ற சட்டமா அதிபர் திணைக்களம் எவ்வாறு குற்றம் இழைத்திருக்க கூடிய இராணுவ ஜெனரலுக்கு ஆஜராகுவார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாவற்குழி பிரதேசத்தில் 1996 ஆம் ஆண்டு காணாமல் போனோர் தொடர்பான மூவருடைய ஆட்கொணர்வு மனுமீதான விசாரணை நேற்றையதினம் யாழ்.நீதிமன்றில் நடைபெற்ற போதே மேற்கண்ட கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வழக்கில் முதலாம் எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டி கெலான சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாகுவது தொடர்பாக மனுத்தாரர் தரப்பு மற்றும் அரச தரப்பு தமது நியாயங்களை எழுத்து மூலம் சமர்ப்பணமாக சமர்ப்பிக்க யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றையதினம் குறித்த வழக்கானது யாழ்.மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது மனுத்தாரர் சார்பில் சட்டத்தரணி சுபாஜினி மற்றும் சட்டத்தரணி குருபரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இதேபோன்று முதலாம் எதிரியான முன்னாள் நாவற்குழி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான தற்போதைய மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டி கெலான, இரண்டாம் எதிரியான இராணுவ தளபதி மகேஷ் சேன்நாயக்க (அலுவலக ரீதியாக) மற்றும் மூன்றாம் எதிரியான சட்டமா அதிபர் (அலுவலக ரீதியாக) ஆகியோர் சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாவதாக அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் மன்றுக்கு தெரிவித்தார்.

இதன்படி நேற்றைய வழக்கு விசாரணையின் போது முதலாம் எதிரியான முன்னாள் லெப்டினன்ட் கேணலும் தற்போதைய மேஜர் ஜெனரலுமான துமிந்த கெப்பிட்டி பெலான சார்பில் அரச சட்டவாதி ஆஜராவது தொடர்பாக மனுதாரர் சட்டத்தரணிகள் தமது ஆட்சேபனையை முன்வைத்தனர்.

குறிப்பாக சர்வதேச மனிதவுரிமை சட்டம், குற்றவியல் சட்டம் போன்றவற்றினையும், உயர் நீதிமன்றங்களில் இடம்பெறுகின்ற சித்திரவதை வழக்குகளை மேற்கோள்காட்டி வாதிட்டிருந்தார். அதாவது குறித்த முதலாம் எதிரியான குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிரான சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த. 2002,2003 ஆண்டு வழக்குகளில் இவ் இராணுவ அதிகாரியே பொறுப்புக் கூற வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அந் நபர் மீதான தனிப்பட்ட குற்றவியல் பொறுப்பு காணப்படும் போது அவர் சார்பாக சட்டமா அதிபர் ஆஜ்ராவதானது குறித்த காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக அரசாங்கம் பொறுப்புக் கூறுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

உயர் நீதிமன்றங்களில் சித்திரவதை வழக்குகள் இடம்பெறுகின்ற போது அது தொடர்பில சட்டமா அதிபர் முன்னிலை யாவதிலலை. இவ்வாறான நிலையில் குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக உண்மையானது நிருபிக்கப்படும் போது அரசாங்கம் கூட்டுப்

23☛


## வேலை வாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றில் பின்வரும் வெற்றிடங்கள் உண்டு.

யாழ் நகரில் - Branch billing Executive
நெல்லியடி - Branch billing Executive
கிளிநொச்சி - Branch Billing Executive
வாகன சாரதி - கனரக வாகனம் கொழும்பு - யாழ்ப்பாணம்

(C-1263)

தொடர்புக்கு :- 0770698816 / 0768404112
நேர்முகப்பரீட்சை யாழ் நகரில் இடம்பெறும்



## விஸ்டம்

தொழில் நுட்பக் கல்லூரி
இல 63,சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

A/L 2018 விசேட வினாத்தாள் வகுப்பு

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்(I.C.T)

ஆரம்பம் : 20.01.2018 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு

ஆசிரியர் : S.Maurathasan
BSc (Hons) in Computing & IS, MIT,SCJP,PGDE
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

தொடர்பு : 0772487774

(C-1257)



வவுனியாவில்...

## யாழ் முன்னணி ஆசிரியர் திரு.வே.அன்பழகனின்

தரம் 5 4 3 2

பரீட்சைகள் நடைபெறுகின்றன

CDC கல்லூரி 8ம் ஒழுங்கை, வைரவர்கோவில் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
(கொக்கோகோலா நிறுவனத்திற்கு முன்பாக)

077-3211233, 024-2223228



## அருந்துங்கள் விருந்து

சைவம் - அசைவம்

தினமும் காலை 11 மணி முதல்
இன்சுவை யாழ் ஒடியல் கூழ்
தினமும் மாலை 4 மணி முதல் மதி மறவாத
இல்லற உணவு சுடச்சுடபிட்டு, நண்டு, இறால்,
கணவாய் நாட்டுக்கோழி மேலும் பல

யாழ் பாடி

(C-1269)

இல 49–51, அம்மன் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல 0212226868, 0777360353




## ஹொட்டேல் வேலைவாய்ப்பு

மாதம் 50,000/- சம்பளத்துடன்
வெளிநாட்டு ஹொட்டேல்
வேலைவாய்ப்பு. Waiter,
House Keeping & Cleaners.
முன்னனுபவமுள்ளவர்களுக்கு
முன்னுரிமை

(C-1271)

அழையுங்கள் : 0777 324 004


# மரண அறிவித்தல்



## சின்னத்துரை கமலேஸ்வரன் (பேபி)

(மஸ்கன் லிமிட்டட், ஈவினை)

மூளாய் தொல்புரத்தை பிறப்பிடமாகவும் சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய் மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கமலேஸ்வரன் (பேபி) கடந்த (15.01.2018) திங்கட்கிழமை கனடாவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், நகுலேந்திரன் - தங்கரத்தினம் (கனடா) ஆகியோரின் மருமகனும், நகுலேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், ரிஷிகேசவன், ருஷாளினி, தர்சன், சுபாங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் சுகன்யா ஆகியோரின் சகோதரரும், சிவமணி (ஓய்வு பெற்ற அதிபர், J.P), வின்சன் விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும், விக்டர் அவர்களின் பாசமிகு மாமனாரும், அக்ஷயனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.01.2018) வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிந்தாமணிப் பிள்ளையார்
கோவிலடி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல் : கி.சிவமணி குடும்பம்
(ஓய்வுபெற்ற அதிபர், J.P.)
077 725 0914

(1264)


## இந்து நாகரிகம் A/L

ப.ஜோதீஸ்வரன்

Day, 2020,2018,2019

1) DMI - யாழ்ப்பாணம்
2) பொருளியற்கல்லூரி யாழ்ப்பாணம்
3) C.C.A சுன்னாகம்
4) Maths Center - நெல்லியடி
5) BEACON - உடுப்பிட்டி
6) C.M.E - பருத்தித்துறை

(C-1260)



## காணி விற்பனைக்கு

வவுனியா உக்குளாங்குளம்
சிவன் கோவிலுக்கு அருகாமையில் 2 2/1 பரப்பு காணி
விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு :- சிவா
0768911836,
0778336746

(2446)



## "சொர்க்கம் திருமணசேவை"

கனடாவில் வசிக்கும் 38,33 வயதுடைய இந்து மதத்தை சேர்ந்த படித்த மணமகள்களுக்கும் கனடாவில் N.R.C மதத்தைச் சேர்ந்த 33 வயதுடைய மணமகளுக்கும் தகுந்த மணமகனைத் தேடுகிறோம்.
கனடாவில் வசிக்கும் 30, 35 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைத் தேடுகிறோம்.

(C-127)

தொடர்புகளுக்கு :
Tp & Viber : 0014166661855,
0016475043336



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண்,மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1228)

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## அரியதோர் சந்தர்ப்பம்

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்

ஒமேகா இன்

இல. 101. பிரதான வீதி A9. யாழ்ப்பாணம் (மேல் நீதிமன்றம் முன்பாக)

IAS HOSPITAL (PVT) LTD

37 வருடங்களாக மாத்தளையில் இயங்கி வரும் IAS வைத்தியசாலையின் வைத்தியர் Dr.திரு. கனராஜா அவர்களால் கடந்த இரண்ட வருடங்களாக வவுனியாவிலும் பரந்தன் சந்தி, பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் மேல்மாடியிலும் இயங்கி வந்து மாற்றவே முடியாத "நீரிழிவு" எனும் கொடிய நோயை முற்றாக மாற்றி வெற்றி கண்ட வைத்தியர் இவரால் குணமாக்கப்பட்ட அனேக நோயாளிகளின் அன்பான வேண்டுகோளுக்கிணங்க மாதத்தில் இரண்டு சனிக்கிழமைகள் அம் மக்களுக்காக ஒதுக்கித் தந்துள்ளார். எனவே இந்த பொன்னான வாய்ப்பை தவறவிடாது பயன்பெறுங்கள்.

பாரிச வாதம், மூட்டு வாதம், தோல் வியாதிகள், சிறுநீரக நோய்கள், தீராத தலைவலி, மனநோய், ஞாபக மறதி, சொராசிஸ், குழந்தைகளுக்கான மருந்து சேவை, இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், கண், காது குறைகள், குழந்தை பாக்கியம் இல்லை, நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள், மூல நோய்கள், வெண்குஸ்டம், பிறசர் போன்ற அனைத்து நோய்களுக்கும் நிரந்தரத்தீர்வு

(C-1267)

20.01.2018 / 03.02.2018 / 17.02.2018 / 03.03.2018 / 17.03.2018
போன்ற திகதிகளில் நடைபெறும்
வைத்தியரை முற்பதிவு செய்யவும் 0774405969, 0774441082


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.